போன் நெ. 15. விலை 2 அணு. REGD No. 4642

# திராவிடநாடு

RAMAMOORTHY M. O.

2-1-55

மலர் 13 | இதழ் 27

2-1-55 AGENCIES

## "வளையலோ வளையல்!"

"வளையல்கள் தேவை!

அவசரமாகத் தேவை!!

எங்கேயிருந்தாலும், சரி—உடனே தேவை.

கரத்திலே அணிவித்து, நான் கண்டு மகிழ வேண்டும்.

ஆசை தாங்க முடியவில்லை!

அன்பர்களே—முடியுமா ?

எங்கிருந்தாலும், கொண்டுவருக."

*

"ஊரு உலகத்திலே ஆள் இல்லேன்னு உம்மொடெ கழுத்திலே என்னைக் கட்டினுளே — அவாளைச் சொல்லணும். அஞ்சு வருஷமாச்சு, உமக்கு ஆம்புடையாளா வந்து. என்ன சுகத்தைக் கண்டேன்? இந்தான்னு ஒரு பட்டுப்புடவை உண்டா! எங்கேயாவது போகவர போட்டுக்க, ஒரு வைரப்பொட்டு உண்டா!! நானும் தான் இருக்கேன், ஆக்கவும் போடவும்—உம்பபேச்சுக்கு ஆட்டம் போடவும்."

ஜகன்னுதய்யரின் பார்யாளுக்கு அடுத்த வீட்டு ஜகதம் புதிதாகச் செய்த வளையல்மீது கண்பட்டதன் விளைவு — இந்தச் சலிப்புப் பேச்சு! அவளுக்கு மட்டுமென்ன, அநேகமாக 'முதல் தேதி நோக்கி' வாழும் அநேக குடும்பங்களில், இதுபோல உண்டு! அதுவும் அடிக்கடி!!

சகதர்மனி, ஒன்றும் மணிமேகலையல்ல—ஜகன்னுதரும் ரிஷீசுவரர் அல்ல. குடும்பஸ்தர்! நாலுபேரைப் போல வாழ வேண்டும், நமது காது கையில் ஏதாவது இருந்தால்தான் கௌரவம் என்று கருதக்கூடிய சமூகத்தில் வாழ்பவர்கள். அதனுலேயே, அம்மையார் கேட்கிருர்! அவரும், தமது அகத்துக்காரியின் அழகு கைகளில் வளையல் போட்டுப் பார்க்க வேண்டுமென ஆசைப்படுகிருர்!!

*

தலைப்பிலே, நாம் குறிப்பிட்டிருப்பது, அந்த ஆசையின் காரணமாக, ஜகன்னுதய்யர் தெரிவித்ததல்ல. மாதம் ஏதோ சம்பாதித்து குடும்பத்தை நகர்த்தும், ஜகன்னுதர்களுக்கு—மனைவி கேட்டதும், 'வளையல் எங்கே, வளையல்!' என்ரு தேட முடியும்? கோபக்காரராயிருந்தால், மனைவியின் முதுகு வீங்கும்! சாதுவாயிருந்தால், தலையணை நனையும்!! இது தானே, சகஜமாக நடைபெறுகிறது, எங்கும். ஆகவே, ஜகன்னுதய்யர் அல்ல, இதுபோலக் கேட்டது! ஜகம் புகழும் மகான் ஒருவர்!! ஆமாம், மகான் தான் கேட்டார். வளையல் வேண்டும்!- என்று, ஈசன் திருவடி நிழலை அடைய இதோபதேசம் செய்யும், ஒரு மகான் தான் கேட்டார். "சிஷ்ய கோடிகளே! சீக்கிரமாகச் சென்று கொண்டு வாருங்கள். நான் அணிவித்து மகிழவேண்டும். வளையல் சாதாரணமாக இருக்கக்கூடாது. மணி பொதித்த வளையலாக இருக்கவேண்டும்." குருநாதர் கூறிடக்கேட்ட சிஷ்யர்கள், வளையல் வேட்டைக்குச் சென்றனர்! எங்கே தேடினரோ, எந்தப் பொற்கொல்லர் செய்தாரோ, எப்படியோ—வளையல் வந்து சேர்ந்தது. ஜகன்னுதரா, அவர்! ஜகம்புகழும் மகான்!!-ஆகவே, வளையல் சீக்கிரமாகக் கிடைத்திருக்கும். அந்த வளையலை எடுத்துக் கொண்டு, ஆண்டவனின் சந்நிதானத்துக்குச் சென்று "அப்பனருகிலிருக்கும் அம்மையே! உன் காதிலே குண்டலமும், கழுத்திலே ஆபரணமும், இடையிலே மணிபதித்த ஒட்டியாணமும் இருந்தாலும், கரத்தில் வளையல் இல்லாததைக்காணக்கூசுகிறது, கண், எனக்கு! அதனுல் கொண்டுவந்தேன், வளையலை!! அம்மையே — தனயன் தரும் காணிக்கையை ஏற்றுக்கொள்," என்று கசிந்துருகி, கண்ணீர் மல்கி, பாடல் இயற்றி, படைக்கவில்லை— அவர்! வளையல் வந்ததும், எடுத்தார்! பார்த்தார்!! இப்படிப்பட்ட வளையல் தான் தேவையென்ருர் — இதைப் போன்ற வளையலைத்தான் அம்மை போட்டிருந்தார் என்று சொன்னுர்— அந்த வளையல்களைப் பல முறை பார்த்தார்—அதோடு பக்கத்திலிருக்கும் பத்தினியின் முகத்தையும், அதைத் தாங்கியிருக்கும் கரத்தையும் பார்த்தார்—களிப்பு பொங்கிற்று, உவகை வழிந்தது. சிஷ்யகோடிகள் களித்து நிற்க, 'எப்படியோ' வந்த வளையல்களை எடுத்து, அருமை மனைவியின் கைகளிலே போட்டு, 'ஆனந்தமென் சொல்வேனே! என்னிருகண் பெற்ற இன்பம் என் சொல்வேனே!!,' என்று குதூகலித்தார்.

*

மகானு, அவர்!—என்று, கேள்விக் குறியை எழுப்பலாம், உங்களில் சிலர்.

தம்பிரான்களைக் கிண்டல் செய்ய, தீட்டப்பட்ட நாடகம் ஒன்றின் காட்சியோ என்றும் சந்தேகப் படலாம்.

(15-ம் பக்கம் பார்க்க)

# அரசியற் கருத்துக்கள்

**[ அன்று முதல் இன்று வரை ]**

[பேராசிரியர் இருதயராஜ்]

## அரிஸ்டாட்டில்

பிளேட்டோவிடம் பதினேழு ஆண்டுகள் கல்வி கற்ற அரிஸ்டாட்டில் என்பவர் அடுத்தபடியாகக் கிரேக்க அறிஞர்கள் பட்டியலில் இடம் பெறுகிறார். பிளேட்டோவின் மாணவர்களில் முக்கியமானவர் அவர். ஆனால் இருவருக்கும் கருத்திலும் கொள்கைகளிலும் வித்தியாசங்கள் காணப்படுகின்றன.

நீதி, அறம் என்ற பொதுவான கொள்கைகளின் அடிப்படையில் ஒரு இலட்சிய அரசு எப்படி இருக்க வேண்டும் என்று கனவு கண்டார் பிளேட்டோ. ஆனால் அவருடைய மாணவர் அரிஸ்டாட்டில் தன்னுடைய நாளில் கிரீஸில் உள்ள பல்வேறு நகர ராஜ்யங்களில் நிகழ்ந்து வந்த நிகழ்ச்சிகளைத் துணைகொண்டு சில முடிவுகளைக் கண்டார். பிளேட்டோவைப் போல் அவர் ஒன்றும் புதிதாகக் கண்டுபிடிக்கவில்லை. தன் கண்ணால் கண்ட நிகழ்ச்சிகளை ஆதாரமாகக் கொண்டே சில துணிந்த முடிவுகளைத் தெரிவிக்கிறார்.

மனிதன் இயற்கையாகவே அரசியல் வாழ்க்கை அல்லது சமூக வாழ்க்கையை விரும்புகிறவன் என்ற எண்ணத்திலிருந்து தனது ஆராய்ச்சியைத் துவக்குகிறார் அரிஸ்டாட்டில். தங்களது சுய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவும் தங்கள் பரம்பரையின் பாதுகாப்புக்காகவும், ஆணும் பெண்ணும் ஒரு புறமும், எஜமானனும் அடிமையும் மற்றொரு புறமும், ஒன்று சேர்ந்து வாழ விரும்புகிறார்கள். அதனால் குடும்பம் என்று ஏற்படுகிறது. காலக்கிரமத்தில் குடும்பத்தின் தேவைகள் அதிகரித்து, சுயதேவையை பூர்த்தி செய்யமுடியாமல் பல குடும்பங்கள் சேர்ந்து வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்போது, ஒரு நகரம் அல்லது சமூகம் என்று ஒன்று உண்டாகிறது. அப்பொழுதுதான் மனிதனுக்கு நிறைவாழ்வு உண்டாகிறது. ஒரு அரசு அல்லது சமூகம் என்பது ஒரு பெரிய குடும்பம் போல. சாதாரண குடும்பத்திலிருந்து இயற்கையாக வளருவது சமூகம்.

மனிதன் தனித்து வாழ்ந்தால் மிருகத்துக்கும் அவனுக்கும் வித்தியாசமில்லை. மற்றவர்களுடன் சேர்ந்து, நாகரீக வாழ்க்கை நடத்தும்போதுதான் அவன் மனிதனாகிறான். ஆக, மனிதன் மனிதனாக வாழ ஒரு அரசு தேவை. ஒரு அரசில், அவன் அங்கம் வகிக்கும்போதுதான், அவன் பூரணவாழ்வு வாழ்கிறான். தனித்து வாழும் வாழ்க்கை குறைவாழ்வைத்தான் தரும்.

சட்டங்களைப் பிரயோகித்து மக்களைத் தண்டிப்பதற்காகமட்டும் அரசாங்கம் இருக்கவில்லை. இயற்கையாகவே மனிதன் நல்ல குணம் படைத்தவன். இந்தக் குணத்தை வளர்த்து, அவன் நல்ல காரியங்களைச் செய்வதற்கு உதவியாயிருக்கவேண்டும், அரசாங்கம். மனிதன் எப்படி நல்வாழ்க்கையும் அதன்பயனாக மனத் திருப்தியும் அடைய விரும்புகிறானோ, அதே போன்று அரசும் அதே நோக்கத்துடன் செயலாற்றவேண்டும்.

மனிதர்கள் எல்லோரும் ஒருவிதமாக அறிவுள்ளவர்களாக இருப்பதில்லை. அதனால் ஒரு சிலர் எஜமானர்களாகவும் வேறு சிலர் அடிமைகளாகவும் இருப்பது நியாயமே என்று அரிஸ்டாட்டில் கருதினார். ஆனால் ஒரு மனிதனுடைய அறிவை அளந்து அவன் எஜமானனாக வேண்டியவனா என்று எப்படி, யார் நிர்ணயிப்பது என்பது பற்றி அவர் ஒன்றும் சொல்லவில்லை.

ஆளுபவருக்கும் போர்வீரர்களுக்கும் பொதுவுடைமையைப் போதித்தார் பிளேட்டோ. அதைஎதிர்த்து சொந்த சொத்துரிமையும், குடும்பஸ்தாபனமும் இயற்கையாக மனிதருக்கு இருக்க வேண்டிய உரிமைகள் என்று வாதாடுகிறார் அரிஸ்டாட்டில். தன்னைத்தான் உணர்ந்து நடப்பதற்கும், தன்னிலே உள்ள சக்தியையும், விசேஷ பண்புகளையும் வெளிப்படுத்துவதற்கும் இந்த உரிமைகள் கொடுக்கப்பட வேண்டும். மனிதருக்குள் இருக்கும் வேற்றுமைப்பாடுகளையெல்லாம் ஒடுக்கியோ, ஒழித்தோ கம்யூனிஸத்தின் மூலம் ஒருமைப்பாடு காண்பதைவிட மக்களுக்குள்ளே இருக்கும் வேற்றுமைப் பண்புகளை வளர்த்து அவர்களுடைய வெவ்வேறு சக்திகளை முழுமையும் பிரயோகிக்க அவர்களுக்கு சந்தர்ப்பம் அளித்து அதன் மூலம் சமூகத்துக்கு அளவிறந்த நன்மை தேடுவதே மேலானது என்ற கருத்தை வெளியிட்டிருக்கிறார் அரிஸ்டாடில்.

சட்டம் என்பது அரசாங்கத்தால் ஏற்படுவதல்ல. அரசாங்கமும் சட்டத்துக்கு உட்பட்டது என்ற காரணத்தால். அதனால் தான் சட்டதிட்டங்களால் அமைக்கப்பட்ட அரசாங்கமே மன்னராட்சிக்கு மேலானது என்றார்.

பிளேட்டோவைப் போலவே அரிஸ்டாட்டிலும் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்திருந்தார். கல்வியின் மூலம் ஒவ்வொரு பிரஜையும் சமூகத்தில் அங்கம் வகிப்பதற்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். அதனால் கல்வியின் நோக்கம் அறிவை வளர்ப்பது மட்டுமல்ல அரசியல் நோக்கமும் கொண்டிருக்க வேண்டும். அரசாங்கத்தின்

---

## நர்சுகள்

★

பிரிட்டனில் 350 பேருக்கு ஒருவர்.

அமெரிக்காவில் 3500 பேருக்கு ஒருவர்.

இந்தியாவில் 3500 பேருக்கு ஒருவர்.

இந்தியாவுக்கு, பொத்தம் 740 ஆயிரம் நர்சுகள் தேவை. இதை எட்டிப் பிடிக்க நூறு வருடங்களாகும்.

18–8–52-ல் சென்னைக்கு வந்திருந்த 'டில்லி' தேஷ்முக் தந்த விபரம், இது.

நோக்கத்துக்குத் தக்க எந்த விதமான பிரஜைகள் தேவையென்று தெரிகிறதோ, அவ்விதமான கல்வி புகட்டப்பட வேண்டும். அதனால் கல்வி அரசாங்கத்தால் தான் புகட்டப்பட வேண்டும்—தனிப்பட்டவர் கையில் இருக்கக் கூடாது.

ஒரு பிரஜை அரசாங்கத்தில் பங்கு கொண்டு ஆளுவதற்கும் தயாராக இருக்கவேண்டும், அதே நேரத்தில் பொதுவான மக்கள் நியாய சபையில் அங்கம் வகித்து நியாயத்தை வழங்கித் தீர்ப்புக் கூறும் திறமையும் இருக்கவேண்டும். இவ்வித கடமைகளை ஒரு பிரஜை நிறைவேற்றவேண்டுமானால் அவனுக்கு நிறைய அவகாசமும், திறமையும் வேண்டும். அதனால் வேலைசெய்து பிழைக்க வேண்டிய நிர்ப்பந்தத்திலிருந்து கொண்டு குடும்பத்தைப் பராமரிக்க பொருளீட்டும் கவலையால் பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கும், போதிய அவகாசமின்மையால் அரசியல் காரியங்களில் ஈடுபட்டுப் பயிற்சி பெற முடியாதவர்களுக்கும் அரசியலில் பங்கு இருக்கக்கூடாது என்று நம்பினார் அரிஸ்டாட்டில்.

இந்த முறைப்படி ஆட்சி நடந்தால் அது செல்வர்களின் ஆட்சியாகத்தான் இருக்கமுடியும். சொந்த முயற்சியில் பொருளீட்டும் தொழிலாளர் வர்க்கமே ஆட்சியில் பங்கு பெற முடியாமல் போய்விடும். அது உண்மையான ஜனநாயகமாகாது. இருந்தாலும் அதைத்தான் அவர் ஆதரித்தார்.

மக்கள் கூடித் தங்கள் பொது நன்மைக்காக அரசு ஒன்றை சில சட்ட திட்டங்களுடன் ஏற்படுத்திக் கொள்ளுகின்றனர். பிறகு அந்த அரசை நடத்துவதற்கு ஒரு அரசாங்கம், மாற்றப்படலாம், அல்லது நீக்கப்படலாம், புதியதொரு அரசாங்கம் ஏற்படலாம். ஆனால் அரசாங்கம் மாறும்போதெல்லாம் அரசும் மாறுவதில்லை. அரசு என்பது நிலையானதொரு ஸ்தாபனம்—முதன் முதலாக இந்த வித்தியாசத்தை எடுத்துக் காட்டியவர் அரிஸ்டாட்டில்தான்.

அரசாங்கங்களை, பிறப்பையொட்டியும், பொருளையொட்டியும், எண்ணிக்கையைப் பொறுத்தும் மூன்று வகையாகப் பிரித்தார். பிறப்பைப் பொறுத்து மன்னர் பரம்பரையாக ஆளுவதில், ஒரு குறை என்னவென்றால் எல்லா மன்னர்களுமே புத்திசாலிகளாகவோ பொறுப்புள்ளவர்களாகவோ இருப்பதில்லை என்பது தான். பொருள் அல்லது செல்வத்தையொட்டிய ஆட்சியில் பணக்காரர்களே ஆளுபவர்கள். இதிலுள்ள குறை யாதெனில் பணம் இருக்குமிடத்தில் குணம் இருக்குமென்றோ அல்லது ஆளுந்தகுதியும் திறமையும் இருக்குமென்றோ கொள்ள முடியாது என்பதுதான். எண்ணிக்கையைப் பொறுத்த ஜனநாயக ஆட்சி எல்லாவற்றையும் விட மேலானது. ஏனெனில் மக்களில் ஒரு சிலரைவிட அவர்கள் எல்லோருமே சேர்ந்து ஒரு காரியம் நடத்தினால், தவறுகள் குறையும், நியாயம் பிறக்கும் என்ற நம்பிக்கை அதிகமாகும் என்று கூறுகிறார். எல்லா மக்களும் ஆட்சியில் பங்கு கொண்டால் அவர்கள் நியமிக்கும் அதிகாரிகளை அவர்கள் தவறு செய்யும்போது உடனே தண்டிக்கவோ நீக்கவோ ஜனநாயகத்தில் வழியுண்டு என்பதால், ஜனநாயகமே சிறந்தது என்ற முடிவுக்கு வருகிறார் அரிஸ்டாட்டில்.

அறநெறியில் தவறாமல் மக்கள் நலனையே குறிக்கோளாக ஒருவன் அரசாட்சி செலுத்துவதை மன்னராட்சி என்றார், தாறுமாறாக தன்னிஷ்டம்போல், மக்களை ஏய்த்தும், பயமுறுத்தியும், அவர்களைப் பலவந்தப்படுத்தி கீழ்ப்படியச் செய்தும் தேச்சாதிகாரமாக ஒருவன் ஆட்சி செலுத்தினால் அது கொடுங்கோலாட்சி என்றும், பொருளும் குணமும் அறம் வழுவாமலும் ஒரு சிலராட்சி செலுத்துவதைப் பிரபுக்களாட்சி என்றும், பணப்பேராசையால் சுயநலத்தையே பிரதானமாகக் கொண்டு ஒரு சிலர் ஆட்சி செய்தால் அதைப் பணக்காரராட்சி என்றும், குறிப்பிடுகிறார். கடைசியாக ஆட்சிப் பொறுப்பு பணக்காரர் கையிலுமின்றி மற்றும் ஏழைகள் கையிலுமின்றி மத்தியதர வகுப்பினர் கையில் இருந்து அவர்களால் பொறுப்புடன் ஆட்சி நடைபெறும்போது அது சட்டவரம்புக்குள்ளிருக்கும். மக்களுடைய நன்மையையே குறிக்கோளாகக் கொண்டிருக்கும் என்றும் கூறி, அதை மிகவும் விரும்பத்தக்க விதமான ஜனநாயக ஆட்சி என்று அழைக்கிறார். ஆட்சிப் பொறுப்பு மக்கள் கையில் பொதுவில் இருந்து நடைமுறையில் சமத்துவம் என்ற பெயரால் எண்ணிக்கைப் பலத்தினால் அது ஏழைகள் கையில் சிக்கி ஆட்சி நடைபெற்றால் அது வரம்பில்லாத ஜனநாயக ஆட்சியாகும். அதனால் மக்களுக்கு நன்மை ஏற்படாது என்றும் அரிஸ்டாட்டில் கருதினார்.

அரசாங்கங்களுக்குள்ளே எது சிறந்தது என்று குறிப்பிடும்போது


## இந்தியா லைப் அண்டு ஜெனரல் அஷ்யூரன்ஸ் சொசைடி, லிமிடெட்

**தலைமை ஆபீஸ்: கோயமுத்தூர்**

*********

**31—12—1953 முடிய பாலிசி ரூ. 1000-க்கு வருஷம் 1-க்கு போனஸ்**

**ரூ. 20 முழு ஜீவிய பாலிசிக்கு**
**எண்டௌமெண்டு பாலிசிக்கு ரூ. 15**

அதிகப்படியான போனஸ் அளிப்பதே கம்பெனியின்
தொடர்ந்த அபிவிருத்திக்கு அத்தாட்சி

முக்கிய அம்சங்கள்:
குறைந்த சந்தா விகிதம், உரிமை சீக்கிரம் கொடுப்பது
தமிழ் நாடு முழுதும் பாங்கு ஏஜன்சி வசதிகள்

**பிரதிநிதித்துவத்திற்கு,**
**பாலிசி எடுப்பதற்கு, தக்க நிலையம்.**

M. S. பழனியப்ப முதலியார் B. A., சேர்மேன் & Mg. டைரெக்டர்.
C. R. சிவசுப்ரமண்யம் B. A. டைரெக்டர் & காரியதரிசி

நடுத்தர மக்களால் நடத்தப்படும் மிதமான மக்களாட்சியையே எடுத்துக்கொள்ளுகிறார். இந்த சூழ்நிலையில்தான் சுதந்தரமும் இருக்கிறது. பொறுப்புள்ளவர்களும் பதவியில் இருப்பார்கள். அதிக பணக்காரர்கள் பதவியிலிருந்தால் அதிலேயே மோகமுடையவர்களாய், பேராசை பிடித்தவர்களாயிருப்பார்கள். ஏழைகள் பதவியிலிருந்தால் பொறுப்பில்லாத முறையில் நடந்துகொள்ளுவார்கள் அடிமை மனப்பான்மையுடையவர்களாயுமிருப்பார்கள். அதனால் எப்பொழுதும் திருப்தியுடன் வாழும் நடுத்தர வகுப்பினர் ஆட்சி செய்தால்தான் மிதமான பாதையிற் சென்று செல்வருக்கும் வறியருக்குமிடையே மோதல் இன்றி ஆட்சி செலுத்தமுடியும், அதனால் ஆட்சியும் நிலைத்திருக்கும் என்று நம்பினார், அரிஸ்டாட்டில்.

அரசாங்கத்தின் அலுவல்களை மூன்று விதமாகப் பிரித்தார். ஆராய்ந்து, விவாதித்து அரசாங்கம் செய்ய வேண்டிய காரியங்களை நிர்ணயித்தல், சட்டங்களை இயற்றுதல் ஒரு அலுவல். இவ்வாறு முடிவு செய்யப்பட்ட காரியங்களை அதிகாரிகள் மூலம் நிறைவேற்றுதல், இது மற்றொரு அலுவல். இயற்றப்பட்ட சட்டங்களை மீறுகிறவர்களை விசாரித்து தண்டித்து நியாயம் வழங்குதல். இது மூன்றாவது அலுவல். வரம்பில்லாத மக்களாட்சியில் இந்த மூன்று அலுவல்களும் எல்லா மக்களுடைய கையிலும் இருக்கும். அதனால் அரசு நிலைபெற்றிருக்காது. திறமையற்றவர்கள் பதவியிலிருப்பார்கள். பொறாமையும் அதன் விளைவாக எழும் பூசல்களும் அரசாங்க அலுவல்களைத் தடை செய்யும். அதற்காகத்தான் அரிஸ்டாட்டில் இந்த அலுவல்களைச் செய்வதற்கு, அதாவது ஆட்சியில் பங்குபெறுவதற்கு ஏதாவது ஒரு யோக்கியதாம்சம் இருக்க வேண்டும் என்றார். அதாவது ஓரளவுக்குச் சொத்து உள்ளவர்களுக்குத்தான் ஆட்சியில் பங்கு உண்டு என்ற நியதி ஏற்படுத்தவேண்டும் என்று விரும்பினார். நடுத்தர வகுப்பினர் கையில் ஆட்சிப்பொறுப்பு இருப்பதையே அவர் திரும்பவும் திரும்பவும் ஆதரிக்கிறார் தம் நூற்களில்.

இருந்தபோதிலும் புரட்சியைப் பற்றி அவர் குறிப்பிடும்போது, அடிக்கடி புரட்சி ஏற்பட்டால் அரசு நிலைத்திருக்க முடியாது என்று கருதி அதைத் தடுக்க உபாயங்கள் சொல்லும் போது, ஆட்சிப் பொறுப்பு எப்பொழுதும் ஒரு குறிப்பிட்ட வகுப்பினரிடம் இருக்கக் கூடாது. ஒரு குறிப்பிட்ட வகுப்பினரை ஆட்சிப் பொறுப்பிலிருந்தே அறவே நீக்கிவிடவும் கூடாது. எல்லோருக்கும் சமசந்தர்ப்பங்கள் அளிக்க வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்.

பல நூற்றாண்டுகளாக மேனாடுகளில் பிளேட்டோவை விட அவரது மாணவரான அரிஸ்டாட்டிலின் நூல்கள்தான் அதிக பிரபல்யமாயிருந்தன பிளேட்டோ கற்பனையிற் பிறந்த மனித சுபாவத்திற்கு மேலான, நடைமுறையில் சிரமமான ஒரு இலட்சிய அரசைப்பற்றி எழுதிப் போனார். அரிஸ்டாட்டில் மனிதர்களுடைய சக்திக்கேற்ற, நடைமுறையில் சாதிக்க முடியும்படியான ஒரு அரசைப் பற்றிப் பேசுகிறார். பிளேட்டோவைப்போல் அவரும் கல்வியின் அவசியத்தைப் பற்றியும் தொழிலாளர் வர்க்கத்திற்குப் பதவியில் பங்கு கொடுக்க இயலாதென்பதைப்பற்றியும் எடுத்துச் சொன்னாலும், அடிமைகள் இருப்பதில் தவறில்லை, அவர்கள் சமூகத்துக்குத் தேவையுங் கூட என்று சொல்லும் போதும், பொதுவுடமைத் தத்துவத்தை எதிர்க்கும் போதும், பிளேட்டோவின் கருத்துகளிலிருந்து வேறு படுகின்றார்.

பல நூற்றாண்டுகள் வரை பிளேட்டோவின் நூல்களை விட அரிஸ்டாட்டிலின் நூல்கள்தான் மேனாட்டில் மிகவும் பிரபல்யமாயிருந்தன. அரசியல் நூலின் தந்தை என்று அரிஸ்டாட்டில் இன்றும் அழைக்கப்படுகிறார்.

(தொடரும்)

## ஏன் தயக்கம்?

—★—

மலையென்னப் புகழ்குவித்துக் கொற்றம் பூண்டு
மண்டுபுகழ் இமயத்திற் கொடிநாட்டி
சிலை யெடுத்துப் பத்தினியைச் சிறப்பித்த
சேரர்வழி வந்தவனே ஏன் தயக்கம்?
இலையென்னில் உனக்குரிமை பின் யார்க்கு?
இத்தரணிப் பட்டயங்கள் உன்னுரிமை
தலைகொடுத்தும் உன்னுரிமை மீட்பதற்குத்
தயங்காதே கிஞ்சித்தும் அஞ்சிடாதே!

சங்கத்தமிழ் வளர்ச்சிக்குத் துணைபுரிந்து,
சாகரம்போல் திக்கெட்டும் புகழ்பரப்பி,
எங்கெங்கும் கயற்கொடியைப் பறக்கவிட்ட
எழிற்பாண்டி மன்னர்வழி வந்தவனே!
தங்கநிறக் கதிர்விளையும் உன்னாட்டைச்
சதிகாரர் சூழ்கின்றார் விழித்திடுவாய்!
சிங்கமெனச் செயல்புரியத் துடித்தெழுநீ
சிரமீந்தும் உரிமையினைப் பெற்றிடுவாய்!

காவிரியின் கரையோரம் நகர்புதுக்கி,
கடாரத்தைக் கடல்கடந்து வென்றிட்ட,
மாவீரர் புலிக்கொடியோர் பரம்பரையே
மறத்தமிழா ஏன்தயக்கம் புறப்படுநீ!
பூவிரியும் சோலைமிகு திராவிடத்தைப்
புல்லரிடம் விட்டுவைத்துத் தூங்காதே!
போவிரைவில் உன்னுரிமை மீட்பதற்கு!
புலிப்போத்தே செயல்செய்யப் புறப்படுநீ!

—[சோ. கண்ணப்பன்.]

# அந்த உணர்ச்சி!

இரத்தம் வடிய நிற்கிறான், அவன்.

சித்தம் களிக்க இருக்கிறார், குருநாதர்.

தரை சிவப்பாகி, போட்டிக்கு அழைக்கிறது, செவ்வானத்தை.

தலைவணங்கியபடி நிற்கிறான் அவன்.

தலைநிமிர்ந்தபடி, குருநாதர் பார்க்கிறார், அந்தக் காட்சியை.

எவ்வளவு வலியோ! பாபம்!!—துடிக்கவில்லை, அந்தத் தூயமணி. ஆசான், ஏறெடுத்துப் பார்க்கும் போதெல்லாம், சிரக்கம்பம் செய்து, தண்டனிட்டு நிற்கிறான்.

புண்ணுடன் உடலுடன். அவன்! புன் சிரிப்புடன் அவர்!! இரத்தமோ, ஓடிக்கொண்டே இருக்கிறது.

பகலில் குருநாதரிடம் கல்வியும், இரவில் குருபத்னியிடம் கலவியும் கற்ற சந்திரனா, அந்தச் சீடன். அல்ல! அல்ல!! குருநாதரை, மனம், வாக்கு, காயம் மூன்றாலும், பொன்னெனப் போற்றும், நல் மாணாக்கன். அவன்தான் நிற்கிறான்! அவனது உடல் உதிரக் கண்ணீர் சிந்துகிறது! கண்களிலோ ஆனந்தக் கண்ணீர் அலை மோதுகிறது.

குருநாதர், புலியல்ல; இரத்தம் கண்டு, மகிழ. மனிதர்! மனிதர்களை உய்விக்கும் ஆசான்!! ஆயினும், மாணாக்கன் உடல் சிந்தும், இரத்தம் கண்டு, உவகையுடன் இருக்கிறார். ஏன்?

குற்றம் ஒன்று புரிந்துவிட்டான், அவன்! மாபெரும் குற்றம்! மன்னிக்க முடியாத குற்றம்!!

ஆசான் சொல்லிக் கொடுத்ததை, மறந்த 'மக்கு' ஆகினனோ—என்று நினைப்பீர்கள். இல்லை! மகாமேதை, ஆகிவிட்டான்.

அதுதான் குற்றம்!!!

ஆசிரியரையும் மிஞ்சுகிறான், வித்தையில்.

விற்பன்னன், ஆகிவிட்டான்! மகிழவேண்டிய ஆசான், மனம் புழுங்கினார்—மண்டையில் குடைந்தது, பொறாமை.

விளைவுதான், இரத்தம்! அதுதான், வேண்டுமெனக் கேட்டார்!! வித்தை கற்போர், காணிக்கை செலுத்தவேண்டுமல்லவா.

ஆசானும், சீடனை, காணிக்கை கேட்டார்!

அடவியில் பிளிறும் யானையாயினும், அடக்கிட அஞ்சும் புலியாயினும், துள்ளியாடும் மான் மந்தையினும், வேண்டுமென்றாலும், — இவைகள் எதுவும் வேண்டாம், மணிமுடிகள் சிலதைக் கொணர்ந்து என் அடியில் கிடத்து என்று கேட்டாலும், தயாராக இருக்கிறான், சீடன்! 'இம்,' என்றால், போதும்—'தயார்' அவன். ஏனெனில், இவரால்தானே, இவ்வளவு பெரிய வில்வீரன் ஆனோம் என்பது அவன் நினைப்பு.

இத்தனைக்கும், ஆசான், சீடனை அருகில் அழைத்து வைத்து, நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமும் போதனை புரிந்தார் என எண்ணுகிறீர்களா?—இல்லை! இல்லை!!

விற்பன்னன் ஆகும்வரையில், சிஷ்யன், குருவைச் சந்தித்தவனல்ல. வித்தை கற்கப்போய், விரட்டப்பட்டவன்! குருநாதரின் உருவத்தை மனதிலே ஏந்தி, அவரைப்போல சிலையொன்றை எதிரிலே அமைத்து, இவ்வளவு பெரிய வில்வீரன் ஆகியிருக்கிறான்!!

எனினும், ஆசான், காணிக்கை கேட்கிறார் — அதுவே, தவறு!— ஆனால், சிஷ்யன், மறுக்கவில்லை. மரியாதையுடன், கேட்டான், 'என்ன, வேண்டும் தேவா!

குருநாதர், காசு, பணம், நிலம், மணிமுடி—எதையும் கேட்கவில்லை; அவனுடைய கட்டைவிரலைக் கேட்டார். வில்வீரன், அவன்! அந்த வித்தைக்கு எது உயிர்நாடியோ, அதனைக் கேட்டார்!!

வெட்டிக்கொடுத்துவிட்டு, நிற்கிறான், சீடன்.

உதிரம், வழிந்தோடுகிறது, பூமியில்!

*

ஏகலைவன்—கதையல்லவா, இது என்பீர்கள்.

ஆமாம்! அதே கதைதான்!! பள்ளியிலே ஆசிரியர் இந்தக் கதையைச் சொல்லுகிறார், 'அடடா! என்னே குருபக்தி! என்னே விசுவாசம்!! அவனல்லவோ, பிள்ளை. இப்போதும் இருக்கின்றீர்களே, பிள்ளைகள்—அணில் பிள்ளைகள்! தென்னம் பிள்ளைகள்!" பாரதப் பிரசங்கியும், இதேபோல, வர்ணிக்கிறார்.

ஏகலைவன் கதை, இதுவரையில், இந்த விளக்கத்தை எடுத்துக்காட்டவே பயன்பட்டுவந்தது. இப்போது, அந்தக் கதையை வேறு காரியத்துக்குப் பயன்படுத்துகிறார்களாம் — ஒரிசாவில் வாழும் ஆதிக் குடிகள்.

ஏகலைவன், எங்கள் பாட்டன்!— என்கின்றனராம்.

அன்று அவன் பழி வாங்கப்பட்டான்—இன்று, நாங்கள், பழிவாங்கப்படுகிறோம், என்று சொல்லுகிறார்களாம்.

பழிவாங்கப்பட்டான் எங்கள் பாட்டன்!—என்று சொல்லுகிறார்களாம், ஒரிசா ஆதிக்குடிகள்.

பாரதப் பிரசங்கி, ஏகலைவனை, குருசொல் தவறாசீடர் என்கிறார்—காய்ச்சியபாலில் கற்கண்டும் பாதாமும் சரியாகக் கலந்திருக்கிறதா என்று உற்றுநோக்கியவண்ணம்.

வேதனையையும் ஏழ்மையையும் காட்டி ஆதிக்குடிகள், கூறுகின்றனர், பழிவாங்கப்பட்டான் எங்கள் மூதாதை என்று!

அப்படிச் சொல்வதோடு, விம்மியவண்ணம் இருந்துவிடவில்லை, அவர்கள். அப்படி பழி வாங்கப்பட்ட நிகழ்ச்சியை எடுத்துக்காட்டி, இந்த கருத்துப்பட கேட்கிறார்களாம், "கட்டைவிரலைக் கேட்டார் துரோ

ணாச்சாரியார். ஏன், தெரியுமா? வில் வித்தை, க்ஷத்திரியனுக்கே சொந்தமாம். ஏகலைவன், சூத்திரனும்! பஞ்சமனும்!! இவன், அவ் வித்தையைக் கற்றது தவறாம். கற்றதோடிருந்துவிடாமல், வல்லவன் ஆனது, மகாத் தவறாம்! அது மனுவகுத்த முறைக்கு முரண்பாடாம்!! துரோணர், நமது ஏகலைவனை, இப்படி வஞ்சித்தார். இதனை, புராணத்தில் படிக்கிறோம். இது, அந்தக் காலத்தில் நடந்ததாம்! இப்போதும், அதே ஏகலைவன் நிலையில்தானே, நாம் நடத்தப்படுகிறோம். புராண காலத்தில் நமது மூதாதையான ஏகலைவனை, இப்படி பழி வாங்கினார், ஆச்சாரியார். அவர், உயர்சாதிக்காரர். உயர்சாதிக்காரரின் இடத்தை ஏகலைவன் நெருங்குவதா!—என்பதற்காக அப்படிச்செய்தார், அந்த ஆரியர். இதே காரணத்துக்காகவே, இப்போதிருக்கும் உயர்சாதிக்காரர்களும், நம்மை வஞ்சிக்கின்றனர்! எங்கே நாமும் போட்டிக்கு வந்துவிடுவோமே என்ற அச்சத்தில், மேல் சாதிக்காரர்கள் நம்மை அழுத்தி வைக்க எண்ணுகின்றனர். துரோணர் பெற்றது, கட்டைவிரல்! அது வில்வித்தை காலமாதலால்!!

## மதுரை மாவட்ட
## தி. மு. க. மாநாடுகள்

★

**ஜனவரி 8, 9 தேதிகளில் நடைபெறும்.**

ஷை மாநாட்டு டிக்கட்டுகள் மாநாட்டு அலுவலகத்திலும் (4, கட்ருப்பாளையம், மதுரை), அறிவுப்பூங்காவிலும் (9, திண்டுக்கல் ரோடு, மதுரை) ஆகிய இடங்களில் கிடைக்கும். 8–1–'55 சனி காலை 7 மணிக்கு, மதுரை புகைவண்டி நிலையத்தில், தலைவர்களுக்கு வரவேற்பும், 9—1—'55 ஞாயிறு காலை 8 மணிக்கு, மாநாட்டு ஊர்வலம் பெரிய விளக்குத் தூணிலிருந்து ஆரம்பித்து, கீழ்மாசி வீதி, வடக்குமாசி வீதி, அழகரடி வழியாக மாநாட்டுப் பந்தலை அடையும். உள்ளூர், வெளியூர்க் கிளைக் கழகத் தோழர்கள் கொடியுடன் வரவேற்பிலும் ஊர்வலத்திலும் கலந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்.

எஸ். முத்து.
மாநாட்டுச் செயலாளர்.

இப்போதிருக்கும் 'துரோணர்'கள், கட்டைவிரலையல்ல; கல்வியின் ஒளியை நம்மிடமிருந்து பிரிக்கிறார்கள்! அவர்களைப்போல வாழ அனுமதிக்க மறுக்கிறார்கள்!!"

இங்கல்ல, ஒரிசாவில்.

கேட்பது, ஆதிக்குடிகள்.

அதுவும், சொற்பொழிவுகள்—அரசியல் இயக்கங்கள் மூலம், அல்ல; நெருக்கூத்துக்கள் மூலம்!!

*

"அதைக்கண்டேன், நான். கோபம், கோபமாய் வந்தது எனக்கு.

எப்படியெல்லாம் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள், நமது மக்கள்.

தங்களுடன் எங்கே போட்டிக்கு வந்துவிடுவார்களோ, என்று தடுப்பதற்காக என்னென்ன செய்யப்பட்டிருக்கிறது, அந்தக் காலத்தில்."

இவ்வண்ணம் வெளியிடுகிறார், அன்பா! வேறு யாருமல்ல, பண்டித நேருதான்!! "When I think of this story, my anger was roused at the way people behaved to prevent others competing with them"

ஆத்திரம், எழுந்தது, எனக்கு!—என்று தெளிவாகத் தெரிவிக்கிறார், அவர்.

ஆதிக்கத்துக்குப் போட்டியாக வந்துவிடக்கூடாதென்று தடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று, கூறுகிறார், பண்டித நேரு.

அதோடில்லாமல், தென்னாட்டில் நடைபெறும் இராமாயணத்தைப் பற்றியும் குறிப்பிட்டு, இப்படியெல்லாம் மக்களிடம் உண்டாகியிருக்கும் உணர்ச்சியைப்பற்றி நாம் சிந்திக்கவேண்டும் எனவும் தெரிவிக்கிறார்.

தென்னகத்தில் வாழும் திராவிட மக்களை, உயர்சாதியினர் வீழ்த்தியதை விளக்கும் கதை என்கிறோம், இராமாயணத்தை.

எங்கள் இன மக்களை அழுத்தி வைக்க, உயர்சாதியினர் செய்த சதியின் சித்திரம் ஏகலைவன் கதை என்கின்றனர், ஒரிசா ஆதிக்குடிகள்!!

இரண்டிலும் இருக்கிற உள்ள உணர்ச்சியைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமெனச் செப்புகிறார், பண்டித நேரு.

சிந்தித்துப் பாருங்கள்! — அவர்களைப் பார்த்து, அடிக்கடி நாம் கூவிடும் சொல். இப்போது, அன்பர் நேரு, தனது குழாத்தைச் சிந்தித்துப்பார்க்கும்படி தெரிவிக்கிறார். அதோடு, "அந்தக் காலத்தில் எழுதப்பட்ட வரலாறுகள் ஒருதலைப்பட்சமாகவே எழுதப்பட்டிருக்கின்றன," என்றும் வெளியிட்டிருக்கிறார்.

ஒருதலைப்பட்சமாக! அந்தக் காலத்தில்!!—கூறுவது, பண்டித நேரு.

இதனையே, நாமும் கூறி வருகிறோம்—அதோடு, அந்தக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட அதே முறை இந்தக் காலத்திலும் நீடிப்பதைக் காட்டி இது நெறியா? முறையா? நேர்மையா? என்றும் கேட்கிறோம்.

ஏகலைவன், இழந்தான் கட்டைவிரலை! துரோணருக்கேற்பட்ட, அருமையால். இது பாரத இதிகாசத்தில்! அதேபோல இராமாயணத்திலும், ஆரிய முறையைப் பின்பற்ற முயன்றதற்காக ஒரு 'சூத்திரன்' தலை கொய்யப்பட்டிருக்கிறான்! அவன் பெயர், சம்புகன். கொய்தவர், ராமச்சந்திரமூர்த்தி!! தெய்வீக புருஷன் செய்த, திருவிளையாடல், இது. இப்படி, ஒரு குலத்துக்கொரு நீதி! —வழங்கப்படும் முறையைக் கண்டபோது, கோபம் கோபமாய் வந்தது எனக் குறிப்பிடுகிறாரே, பண்டிதர் — இத்தகைய நிகழ்ச்சிகள் ஒன்று, இரண்டா, நமக்கு? அன்னையைக்கூடி, அப்பனைக் கொன்று, 'ஆலவாயப்பா!' என்ற அய்யருக்கு ரிஷப வாகனரூடராய் பரமேஸ்வரன் காட்சியளித்திருக்கிறார்! பிள்ளையைக் கறி சமைத்து படைத்த பின்னர்தான், சிறுத்தொண்டருக்கு முக்தி கிடைத்தது! சுந்தரர், அய்யர் என்பதால், அவருக்காக தாசிவீட்டுக்குக் கூடச் சென்றிருக்கிறார், எம்பிரான். மணிவாசகர், அய்யர் அல்ல என்பதால், பல பரிசோதனைக்கு ஆளாக்கப்பட்டே, பிறகு முக்திபெற முடிந்தது. இவ்வண்ணம், ஒரு குலத்துக்கு ஒரு நீதி வழங்கப்பட்டு வரும், எத்தனை நிகழ்ச்சிகளை அனுதினமும் படிக்கிறோம், ஏடுகளில்! அவைகளைக் காணும்போது, அன்பர் நேருவைப்போல், நமக்கும் கோபம் கோபமாய் வராதா? ஒரிசாவாழ் ஆதிக்குடிகளைப்போல, அந்த விளக்கங்களை, நமது இன மக்களிடம் எடுத்துச் சொல்லமாட்டோமா. "சூத்திரன் ஒருவன் வேதம் படிக்கக்கூடாது. பிறர் படிப்பதைக்கூட காதுகளால், அவன் கேட்கக்கூடாது. அப்படிக்கேட்டால் அவன் காதுகளில் பழுக்கக் காய்ச்சிய ஈயத்தை எடுத்து ஊற்ற

வேண்டும்"—இது, மனுநீதி! பண்டிதர் காணுவதுபோல, அந்தக் காலத்தில் எழுதப்பட்ட ஒருதலைப் பட்சமான நீதி!!

இதனைத்தானே, சுட்டிக் காட்டுகிறோம், நாம்.

அநீதி! — என்று, ஆரவாரம் செய்கிறோம்.

அழித்தொழிப்போம்! — என்று எக்காளமிடுகிறோம்.

மதத் துறையில் மட்டுமின்றி, அரசியல் துறையிலும், 'துரோணாச்சாரியம்' நடைபெற்று வருவதாலேயே, திராவிட நாடு திராவிடருக்கே, என்று முழக்கமிடுகிறோம்.

அதன் உண்மையை, இப்போது, உணரார் பண்டிதர்! ஏனெனில், ஏகலைவன் கதையிலிருக்கும் ஒரு தலைப் பட்சமான போக்கையே பண்டிதர் இப்போதுதான், உணரத் தலைப்பட்டிருக்கிறார்.

பண்டிதர், பகட்டாமடையும் பிறரைப் பார்த்து, "இவ்வண்ணம் கிளம்பியிருக்கும் உணர்ச்சியை, நாம் கேவலமாக மதிக்கக்கூடாது, சிந்தித்துப் பார்க்கவேண்டும். அப்போதுதான், அதனைக் களைய முடியும்" என்று தெரிவித்திருக்கிறார்.

நல்ல ஆசைதான்! இந்த உணர்ச்சி களையப்படவேண்டிய ஒன்றுதான்!!

ஆனால், அவ்வளவு எளிதான காரியமா?

சீறு சென்று முழக்கமிடலாம், ஐக்கிய நாடுகள் சபையை அதிரவைக்கலாம், அகில உலகும் போற்றக் கூடிய அளவில் கூட பவனி வரலாம் — ஆனால், ஆரியத்தின் முறையை அறுக்க விரும்பி நெருங்கினால், அது பூட்டும் அஸ்திரத்தைத் தாங்க யாராலும் முடியாது! அந்த அஸ்திரத்தால்தான், மாவீரன் சிவாஜியே, மண்டியிட நேர்ந்தது, ஆரியத்திடம்!!

*

நேரு, டிச. 14-ல் டில்லியிலே பேசியிருக்கிறார்—இப்படி வளர்ந்துள்ள அந்த உணர்ச்சியைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்கவேண்டும், என்பதாக. அதே நேரத்தில், டிச 29-ந் தேதி சென்னைக்கு வந்துள்ள ஒருவர், அதே நேருவைப் பார்த்துத் தட்டிக் கேட்கிறார்,

**"ஹிந்துக்கள் விஷயத்தில் மட்டும், திருமண சீர்திருத்த மசோதாக்களை, சட்டம்**

(11-ம் பக்கம் பார்க்க)

# என்னதான் சொன்னாலும்!

**"மலையாள மொழியுடன் நெருங்கிய சம்பந்தமுள்ள திராவிட மொழிப் புத்தகங்களைக்கூட நாம் மலையாளத்தில் மொழி பெயர்க்கவில்லை."**

*

**"ஹிந்திக்கு, இந்தியாவில் ஆங்கிலத்திற்கு இலக்கியஸ்தானத்தில் கிடைத்துள்ள முக்கியத்துவம் ஒருபோதும்கிடைக்காது."**

*

திருவனந்தபுரத்தில் கடந்த 24-ந் தேதியன்று 'சமஸ்தகேரள சாகித்ய பரிஷத்' என்ற மொழி வளர்ப்புச் சங்கத்தாரின் 24-வது ஆண்டு விழாவை, கேரளத் தோழர்கள் மிகவும் சிறப்பாகக் கொண்டாடினராம்! விழாவுக்கு பிரபல அறிஞரான சர்தார் பணிக்கர் அவர்கள் தலைமை வகித்து பேசியபோது மேற்கண்ட கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார். அந்த விழாவில் கன்னடம், தமிழ், மலையாள, இந்திமொழிப் பிரதிநிதிகளும் வந்து கலந்து கொண்டனராம். தமிழ் மொழியின் சார்பில், 'தினமணி' வேங்கடாச்சாரி கலந்துகொண்டு பேசுகையில் "மலையாளம், தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய—நான்கு பிரதேச மொழிகளின் வளர்ச்சியைக் கவனித்து வேண்டுவன செய்ய **தென்னிந்திய இலக்கிய வளர்ச்சிக் கழகம்** (அகாடமி) ஏற்படுத்தும யோசனையை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்," என்று தெரிவித்தாராம்.

*

இலக்கிய வளர்ச்சிக் கழகம்! அதுவும், தென்னிந்திய இலக்கிய வளர்ச்சிக் கழகம்!! எதற்கு? சர்தார் பணிக்கர் தெரிவிக்கிறார், திராவிட மொழிகளிடையில் ஒற்றுமை உலவ, இந்த முயற்சி அவசியமென்று. இதே கருத்தை திருவாங்கூர் பல்கலைக் கழகப் பேராசிரியரான **மாளூர் கே. கோவிந்தப்பிள்ளையும்,** பிரதிநிதிகள் மாநாட்டில் தலைமை வகித்துப் பேசுகையில் வெளியிட்டிருக்கிறார். அவர் கூறியது, இது.

**"கேரளத்தில் எப்பொழுதும் தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, துளு ஆகிய திராவிட மொழிகளுக்குள் ஒருவித அடிப்படை உறவு எப்போதுமிருந்து வந்திருக்கிறது......இந்த அடிப்படையில், நாம் நமது தற்கால உறவை ஆராய்ந்து எதிர்காலத்தில் நமது மொழிகளின் முன்னேற்றத்துக்குத் திட்டம் தயாரிக்கவேண்டும்."**

*

சர்தார் பணிக்கர், மாளூர் கோவிந்தனார், வேங்கடாச்சாரி—நமது கழகத்தவர்களல்ல; எனினும் கழகம் தேவை என்கின்றனர்!, திராவிட மொழிகளை ஒற்றுமைப் படுத்தும், கழகம்!! இதே கருத்தை, சென்னையில் உள்ள பல ஏட்டதிபர்கள், கடந்த சில ஆண்டுகளாக வலியுறுத்தி வருகின்றனர். முன்போர் முறை, 'மித்திரனை'ச் சார்ந்த ப. கோதண்டராமன் என்பார்கூட, இப்படியொரு கழகம் வேண்டுமென்று தீட்டியிருந்தார்—ஆர்வத்துடன்!!

திராவிட மொழிக் கழகம்! கூறுவது அவர்கள்!!-இதனை, இங்குள்ள பலரின் சிந்தனைக்கு வைக்கிறோம். என்னதான் ஆகாயத்தில் பறந்தாலும், பூமிக்கு இறங்கித்தானே வந்தாகவேண்டும். அவர்கள் சொல்கிறார்கள்—திராவிட மொழிகள் ஒற்றுமையோடு வாழவேண்டும் என்று!! அவர்கள் வந்துள்ள தூரம் மொழி அளவில். ஆனால், நாமோ. அந்த மொழிகளின் அடிப்படையிலே, நாடே அமைக்கப்படவேண்டும் எனக் கேட்கிறோம். இதற்கு மறுப்பு—இங்கே! அங்கும் தான்!! ஆனால், இந்த மறுப்பு, இப்போது எந்த அளவுக்கு வந்திருக்கிறது என்பதை இந்த மாநாடு காட்டுகிறது. என்னதான் சொன்னாலும். திராவிட மொழிகளைப் பேசுவோரிடையில்,ஐக்கியம் ஏற்படாமல் இருக்காது. இன்று கனவாகத் தோன்றலாம், பலருக்கு! ஆனால், நாம் சொல்லிவரும் இலட்சியம், நிச்சயம் பகற்கனவாகிவிடாது. அந்த நம்பிக்கையின், எதிரொலிதான், இது! இந்த முயற்சியிலீடுபடும், எல்லோரையும், வாழ்த்துகிறோம்.

★

திராவிடநாடு

காஞ்சி] 2—1—55 [ஞாயிறு

# "நமக்கு, நாமே!"

"மங்கியதோர் நிலவினிலே
கனவிலிது கண்டேன்.
வயது பதினாறிருக்கும்,
இளவயது மங்கை!
தொட்டுத் தொட்டுப் பேசி,
இன்பமதை வீசி......
தென்றலெனும் பெண்ணாள்,
வந்து வந்து சென்றாள்"

*

கருத்தைத் தெரிவிக்கும் இசை கவியரசர் ஒருவரின் பாடல். தென்றலை பெண்ணென்று வர்ணித்து, சிறப்புறச் செய்துவிட்டார்—தென்றலெனும் பெண்ணாளாம். தொட்டுத் தொட்டுப் பேசுமாளாம்! 'எங்கே அந்தப் பெண் – அழைத்து வந்து காட்டு' என்று கவியுடன் வாதுக்கு வருவோர், எவரும் இருக்கமாட்டார். ஆனால், வம்பு மனமும், தெம்பில்லா கொள்கையும் கொண்டோருக்கு, கவியுடன் வீண் சண்டைக்குச் செல்லும் ஆசைகொண்ட மனதிருக்கு—அவா், இளவயது மங்கை என்றதைக் காட்டி, ஏதேதோ பேசச் சொல்லும். அதுபோலத்தான், திராவிட முன்னேற்றக் கழகத்தாராகிய நம்மை, சிலர் இது போது, வம்புக்கிழுக்கும் தொல்லைப் பாதையில் உருண்டுகொண்டிருக்கின்றனர். அவர்கள், தென்றலையும் புயலையும் அறியா, தேய்வு கொண்ட உள்ளத்தினராகும். இத்தகையோரை, இன்று நேற்றல்ல, எத்தனையோ ஆண்டுகளாகச் சந்தித்து வருவதாகும், அறிவியக்கம். அழித்தொழிக்க மாற்றார் வீசிய அம்புகள் ஏராளம்—மந்த மாருதத் தென்றலிலே, பவனி வந்தவர்களல்ல நாம். புயலும் மேகமும் நம்மை எத்தனையோ தடவை, பதம் பார்த்துச் சென்றிருக்கின்றன. இதனை நினைவூட்டி பிறந்திருக்கும் புது ஆண்டில் பூரிக்கும் மகிழ்ச்சியை, உங்களுக்கெல்லாம் தெரிவித்துக்கொள்கிறோம்.

*

புகை மண்டலத்திடையே மிதக்கிறது, உலகம். அதனைக் கவ்வ இருக்கும் இருளின் அபாயம் நீங்கியதாகத் தெரியவில்லை, நீர்வளிக் குண்டு—எனும் பேராயுதம்பற்றி, ஒவ்வொருவரும் அன்றன்றாடம், எச்சரிக்கை செய்தவண்ணமே உள்ளனர். உலகத்தின் இரண்டு முகாம்களெனக் கருதப்படும், அமெரிக்காவும் ரஷ்யாவும் அதுபோன்ற குண்டுகள் யாரிடம் அதிகமிருக்கின்றன என்பதை அறிவித்துக் கொள்ளும் போட்டா போட்டியைக் குறைத்துக்கொள்ளவில்லை. அன்பர் சி. வி. இராமன், இரண்டுதினங்களுக்கு முன்னர் எரிச்சலோடு கூறியதுபோல, "ஒருவர் தலையில் ஒருவர் போட்டு, அவர்கள் அழிவைத் தேடிக்கொண்டால்கூட நல்லது" என்று கருதுகிற அளவுக்கு ஒவ்வொருவருடைய பொறுமையும் அளவு கடந்த நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறது. இதுவரை, ஆறுமுறை நடைபெற்ற வெடிப் பரீட்சையின் விளைவாக, உலகத்தின் எதிர்கால வாழ்வுக்கே உலை தேடப்பட்டு வருவதாக அண்மையில் பண்டித நேருகூட எச்சரித்திருக்கிறார். இப்படி, அடிக்கடி, இந்த 'ஐட்ரஜன்' குண்டுகளை வெடிக்கச்செய்யும் பரீட்சை நடந்து கொண்டிருந்தால், உண்ணும் உணவும், குடிக்கும் நீரும்கூட, மனித இனத்துக்கு அரிதாகிவிடும் என விஞ்ஞானிகள் எச்சரித்தவண்ணமுள்ளனர். இந்த ஆபத்து, விலகும் அறிகுறி தென்படவில்லை. புது ஆண்டு பிறக்கிறது.

ஆதிக்கக் கொடி நாட்டி, மிரட்டி வாழ்ந்த சியாங்கே ஷேக், சின்னஞ்சிறு தீவுக்குச் சென்று, சாவோ வாழ்வோ எனும் சஞ்சலப் படகிலே மிதந்துகொண்டிருக்கிறார். அவரைக் கருவியாக்கி, பூத்திட்ட புது சீனத்தைக் கருக்கிடும் திருப்பணியிலே, அமெரிக்கா, அதிவேகமாகச் சென்றுகொண்டிருப்பதாக அண்மையில் வெளிவந்த செய்திகள், தெரிவித்துக்கொண்டிருக்கின்றன. அடுத்த மகாயுத்தம் மூளுமோ—என்கிற அச்சம் எல்லோருக்கும் உருவாகியிருக்கிறது. இதற்கு அனுசரணையாக அண்மையில் சில அமெரிக்க விமானிகளை, சீனா கைது செய்திருப்பதைக் காரணம் காட்டி வருகின்றனர். இது வேறு, பயத்தை அதிகரித்திருக்கிறது. இந்த நிலையிலே, 1955 நுழைகிறது.

ஐரோப்பாவிலும் சரி, ஆசிய நாடுகளிலும் சரி, அமெரிக்காவிலும், ஏனைய பல இடங்களிலும், எங்கும் பீதியும் குழப்பமும் நீங்கிவிடவில்லை. அரசுகளுக்கு இந்த கதி! ஆங்காங்கு வாழும் மக்களுக்கோ, சொல்லவேண்டாம் — அடிப்படைப் பிரச்னையான, சுகவாழ்வும், சுரண்டலற்ற அன்பு வாழ்வும், ஏற்படும் அறிகுறிகூடத் தென்படவில்லை. இந்த அகில உலகக் காட்சிகளை மனதிலே உண்ணும்போது, இரண்டுங்கெட்டான் நிலையில் அகப்பட்டுக்கொண்டு திண்டாடும் நமது நாட்டின் சித்திரம், கண்ணுக்குத் தெரியாமல் இல்லை. காங்கிரஸ் ஆட்சி, டில்லியிலிருப்பதும் சரி, சென்னையிலிருப்பதும் சரி, எவ்விதமான புதுப்பாதையிலும் செல்லுகிற அறிகுறி எதுவும் தென்படவில்லை. டில்லி—புதுப்புது நம்பிக்கைகளை தெரிவிக்கிறது; சென்னையோ, இருக்கிற ஆட்சி, ஒழுங்காக நடந்துவிட்டால் போதும் என்று இருக்கிறது!! புத்தாண்டுப் பரிசாக, மக்களுக்கு டில்லி, தெரிவிப்பது, தாங்களும் சோஷியலிச சமுதாய அமைப்புக்காகவே பாடுபடப் போகிறோம், என்பதாகும். இது எவ்வளவு தூரத்துக்கு......!—என்கிற ஐயம், எல்லோரையும்போல நமக்கும் ஏற்படாமலில்லை. ஆனாலும் அன்பர் நேருவும் பிறரும் அடிக்கடி தெரிவிக்கின்றனர். இந்த அடிப்படையில், இத்திங்களில், ஆவடியிலே அகில இந்திய காங்கிரஸ் மாநாடு நடைபெறப் போகிறது—அதற்கு புதிதாக தேபர் என்பவர் தலைமை வகிக்கப் போகிறார். அகில இந்திய காங்கிரஸ் தலைமையில் மட்டுமல்ல, தமிழக காங்கிரஸ் தலைமையிலும்கூட மாற்றம் ஏற்பட்டிருக்கிறது—தோழர் கக்கன் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இருவரும் தொண்டர்தம் பரம்பரையிலிருந்து கிடைத்த தூய மணிகள்! — என தேபரைத் தேர்ந்தெடுத்த நேருவும் கக்கனை அறிமுகப்படுத்தும் காமராஜரும் தெரிவிக்கின்றனர். மகிழ்ச்சி, தொண்டர்களுக்கும் இடமுண்டு எனும் பண்பை வெளிப்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற ஆசை, அங்கேயும் அலைமோதிய தற்காக. ஆனால், பலன் என்ன காணப்போகிறோம். விட்ட புத்

தாண்டுமட்டுமல்ல, வரப்போகும் ஆண்டுகளும், இந்தக் கேள்விக் கான விடையை எளிதில் தரா. ஏனெனில், காங்கிரஸ் இயக்கம், கடைமைக்கட்டவேண்டிய இயக்கம் என்றே மக்கள் கருதி வருகின்றனர். ஒருபுறம், சோஷியலிசம்! மறுபுறம் அடிப்படை உரிமை! — என்றெல்லாம் பேசினாலும், மக்களை அடக்கிடவேண்டிய அளவில், டில்லியிலும் சென்னையிலும் சட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன. டில்லி, ஆள் பிடிப்புச் சட்டத்துக்கு, உயிரூட்டிக்கொண்டுவிட்டது! சென்னை, நாடகத் தடைச் சட்டம் ஒன்றை, நிறைவேற்றி வைத்துக் கொண்டிருக்கிறது. இந்த இரண்டும் மக்களுரிமையைப் பறிக்கக் கூடியதென்று, பலமுறை சொல்லியும், கேட்கவில்லை அரசுகள். அதுமட்டுமின்றி, டில்லி, இந்திமொழிபற்றி எடுத்துக்கொண்டிருக்கும் கடுமையான நடவடிக்கைகளையும் நாம் மறந்துவிடுவதற்கில்லை—இந்த நிலையிலே, புது ஆண்டு, மலர்கிறது.

*

இந்திய உபகண்டத்தின் பிற அரசியல் கட்சிகளைப்பற்றி, எதுவுமே எண்ணமுடியவில்லை — அதிலும் ஆந்திராவில் நடைபெற்றிருக்கும் அதிசயத்தைக் காணும்போது. அங்கே நடைபெறப்போகும் தேர்தலில், கம்யூனிஸ்டுகள் ஒரு பக்கம்! ஏனைய கட்சிகள் ஒருபக்கம்—என்ற நிலைமை காட்சி அளிக்கிறது. போன முறை, காங்கிரஸ் ஒருபக்கம் கம்யூனிஸ்டுகளும் ஏனைய கட்சிகளும் அமைத்த கூட்டு முன்னணி ஒரு பக்கம்!! — என்ற நிலைமை இருந்தது. இப்போது, காங்கிரஸ் முன்னணி அமைகிறது. இது, அந்த அகில இந்திய கட்சிக்கு பெரிய அவமானம் என்றாலும் பெற்றிட்ட தோழமையைச் சரியாக வைத்துக் காப்பாற்றிக் கொள்ள கம்யூனிஸ்டுக் கட்சி தவறிவிட்டதென்பதே, பலருடைய எண்ணமாகும். அகில இந்தியக் கட்சிகளின், நிலைமை இது!

இந்திய மண்ணில் அகில இந்தியக் கட்சிகள் என்ற நிலையில் இல்லாது, மொழிக்கும், இனமக்களுக்கும்போரிடும் கட்சிகளில், சீக்கியரின் அகாலிதளம், ஒன்றாகும்! அது, அங்கே, அண்மையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சி மன்றத் தேர்தலிலே வெற்றிக்கொடி நாட்டியிருக்கிறதாம்! அதைத் தவிர்த்து, அகில இந்திய அடிப்படையில் இயங்காது, 'நமக்கு நாம்' என்றவில் இருப்பது, திராவிடரியக்கமாகும்; அதன், வளர்ச்சியை, நாமே வர்ணிக்க வேண்டியதில்லை.

*

மதுரை! சுந்தரத் தமிழின் தொட்டில்—முத்தமிழ்ச் சோலை. அங்கே, அன்றோர்நாள் வைகை ஆற்றில் விளைந்த விபரீதங்களையும் இன்று, அதே வைகையாற்றங்கரையில் வீசும் வசந்தத்தையும் எண்ணிப் பார்க்கும், நல் மனத்தோர்க்கு திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றிருக்கும் வளர்ச்சியின் அறிகுறி நன்கு விளங்கும்.

அடிதடி! தீமூட்டல்! தாக்குதல்! ஏடா—போடா என்ற ஏசல்!—மதுரையின், சராசரி நிகழ்ச்சிகள், அன்று. மாற்றார் வீசிய சாகசத்துக்குப் பலியாகி, சொந்தச் சகோதரர்களையே, விரோதிகளென்றெண்ணி விபத்தையும் வேதனையும் நமக்கு அள்ளித்தந்த இடங்களில், வைகைக்கரையும் ஓரிடமாகும். அங்கு, இன்று, எவரெவர் எரிச்சலோடு பார்த்தனரோ, அவர்கள் கண்களிலே ஒரு புது ஆனந்த ஒளியையும், அடித்த கைகளாலேயே அன்பணைப்பும், பெற்றுவருகிறது, தி. மு. கழகம். அதனைக்காட்டி எல்லோருக்கும் அன்பழைப்பு விடுகிறது, மதுரை மாவட்டக் கழகம். வரும் 8, 9 தேதிகளில், அங்கே, தி. மு. க. இரண்டாவது மாவட்ட மாநாடுகள், நடைபெறப்போகின்றன. செந்தமிழ் கொழிக்கும் மாணக்கரும், செழுங்கிளையென நம்மைக் கருதும்

# விளக்கும், குல்லாயும்!

அகல் விளக்கு ஒன்று. அதை மூடுகிறது, ஒரு குல்லாய்.—இப்படியோர், கேலிச்சித்திரம், திட்டியிருக்கிறது, மித்திரன் ஏடு.

அகல் விளக்கு, இந்திய ஜனநாயகம். குல்லாய், டில்லி கொண்டு வந்த காவல் சட்டம். அருகிலே, உள் நாட்டு அமைச்சர் கட்ஜூவின் படத்தையும், ஏடு போடத் தவறவில்லை.

*

மித்திரன், போற்றும், நபர்—பிரதமர் நேரு, அவரும் அண்மையில் பார்லிமெண்டு சபைத் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது, 'இந்திய ஜனநாயகத்தைப் பற்றி', காரசாரமாக எடுத்துப்பேசினார். எதிர்க் கட்சிகளுக்கு என்னென்ன பொறுப்பிருக்க வேண்டும் என்றெல்லாம் விளக்கினார்.

அவரது ஆட்சியின் போக்கைத்தான் 'விளக்கை அணைக்கும் குல்லாய்' எனத் திட்டுகிறது, அந்த வட்டாரத்து, ஏடு.

*

"அண்ணே; ஜனநாயகம் என்றால், என்னண்ணே" குப்பன், கேட்கிறான்; கோவிந்தனை.

கோவிந்தன் சலித்த வண்ணம், பீடிக்கு, ஒரு அரையணா இருந்தாக் கொடேன்' என்று கேட்கிறானே யொழிய, அவனும் பதில் அறிந்ததாகத் தெரியவில்லை.

குப்பனும், கோவிந்தனும்—வழக்கம்போல வாடிய வண்ணம் தான் இருக்கிறார்கள். இத்தகைய நாட்டில் நிலவும் ஜனநாயகம் என்ன வென்பதை, உலகப் பிரசித்திப் பெற்ற வழக்கறிஞர் பிரிட் என்பார் சொல்லுகிறார்.

"மனிதனுக்கு வாழ்வைக் கொடுக்காத நாட்டில் பேசப்படும் ஜனநாயகம் — உயிரில்லாத பிணமாகும். உயர்ந்தோரின், உல்லாசப் பொருளாகும்—ஓய்வு நேரப் பேச்சாகும்."

உண்மைதானே, அவர் சொல்வது.

வாழ்வு கோரும் நம்மைக் கண்டிப்பது, மித்திரன் ஏடு—மித்திரன் ஏட்டால் கண்டிக்கப்படும் காவல் சட்டத்தைக் கொண்டு வருவது டில்லி.

அவர்கள், கண்டிக்கிறார்கள்! கை கோர்த்து வாழவும் செய்கிறார்கள்! —மயில் சிறகு மாதிரி, அவர்களது உள்ளம். ஆனால், ஜனநாயக சங்கநாதம் மட்டும், குறைவதில்லை.

குப்பனும், கோவிந்தனும்......! அவர்களது வாழ்வைப்பற்றி, அவர்கள் எங்கே நினைக்கிறார்கள்.

★

சிந்தனை வீரர்களும், ஏராளம் உண்டு அங்கே. அந்த மதுரை மாவட்ட சீர்திருத்த மாநாட்டுக்கு சென்னை தோழியர் சக்தியவாணி முத்து தலைமை தாங்கப் போகிறார்கள். "தம்பி" இதழாசிரியர் தோழர் வில்லாளன் M. A., துவக்கிவைக்கப் போகிறார். இரண்டாவது நாள் நடைபெறும் அரசியல் மாநாடு, "முரசொலி" ஆசிரியர் தோழர் மு. கருணாநிதி தலைமையில் நடைபெற இருக்கிறது. தோழர் எம். பி. சுப்பிரமணியம், துவக்கிவைக்கப் போகிறார்கள். வழக்கம்போல் இரு தினங்களிலும், நாடகங்களும், இசையும் உண்டு! எல்லாத் தோழர்களுடைய, கருத்து விருந்தும் உண்டு!! அந்தக் காட்சியைக் காணவரும்படி, நமது தோழர்களை மட்டுமல்ல, மாற்றுக் கட்சிச் சகோதரர்களையும் மனதார அழைக்கிறோம்.

மதுரை நகரைப் பொறுத்தமட்டில், மாற்றுக் கட்சித் தோழர்களை, விரும்பி அழைப்பதற்குக் காரணம் உண்டு. நம்மை ரஷ்யர்கள் போலவும், தம்மை அமெரிக்கர் எனவும் கருதிய வண்ணம் நடமாடும் நண்பர்கள் பலர் உண்டு அங்கே! அவர்கள் மனதை, மெழுகாக்கி, நினைத்ததைச் சாதிக்கும், நெருப்பு நெஞ்சினரும் கூட உண்டு.

அதனாலேயே, அடிக்கடி, அரசியலின் பேரால், தி. மு. க. விரும்பாத சில நடவடிக்கைகள், அங்கே தென்படுகின்றன. அதனாலேயே, அவர்களையும், அன்புடன் அழைக்கிறோம். ஏனெனில் வளர்ந்துவரும் உலகில், பழைய ஆண்டு கழித்து புதிய ஆண்டு பிறப்பதுபோல, பழைய எண்ணங்கள் உதிர்ந்து புதுமைக் கருத்துக்கள் பொலிவு பெற்றே வருகின்றன, இந்த உண்மையை, அவர்களால் போற்றப்படும் இந்திய — துணைத் தலைவர் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணனே, இரண்டொரு தினங்களுக்கு முன் பேசுகையில் தெரிவிக்கிறார். இதனை, குன்றக்குடிகளாயினும் சரி, 'கோதண்டம்' தூக்குவோராயினும் சரி, மறுக்கமுடியாது. ஏனெனில், வளரும் புதுமை எண்ணங்கள் வாகை சூடிடும்காலம், இது. அதனை, எல்லோரும், எண்ணிப் பார்த்திட வேண்டும். என்னதான், அகில உலக தத்துவத்தையும், அகில இந்திய ஒற்றுமையையும் பேசினாலும், அவரவர்க்கும் எது இருப்பிடமோ, அது வளம் பெற்றால்தான், சுகமாக வாழமுடியும். அந்த வளம்-நாம் வாழும் திராவிடத்துக்கு அவ்வளவு எளிதில் கிடைக்கும் என்கிற நம்பிக்கையுமில்லை. அதனாலேயே, தனிநாடு பெற்று, நமக்கு நாம் என வாழ வேண்டுமென்று வலியுறுத்தி வருகிறோம்.

அந்த இலட்சிய ஒலியை அறிய மாற்றாரும், ஒலிக்கும் இலட்சியத்துக்கு உறுதுணை நிற்க உற்றாரும்' ஒன்று திரண்டு மதுரை மாநாடுகளுக்கு வரவேண்டுமென அன்போடு அழைக்கிறோம்—மாச்சரியம் விலகட்டும்; மனித மாண்பு துலங்கட்டும்; வாழ்வு நமக்கும் கிடைக்கட்டும்—என்கிற புத்தாண்டு நல் வாழ்த்துக்களுடன்.

★

# தேன்—நமக்கு, இல்லை!

"அருமையான தேன்!" என்றொருவன் காட்ட, "எங்கே?" என்று இன்னொருவன் கேட்க, "அதோ! உச்சிக் கிளையில்," என்று சொன்னால் எப்படியிருக்குமோ, அது போல அன்பர் கிருஷ்ணமாச்சாரியார், செப்பியிருக்கிறார் ஒரு செய்தியை !!

டில்லி சர்க்கார் **500** கோடி ரூபாய் செலவில், மூன்று பெரிய எஃகுத் தொழிற்சாலையை, விரைவில் ஏற்படுத்த உத்தேசித்துள்ளார்களாம். மூன்று ஆலைகள்! 500 கோடி ரூபாய் செலவில் !!

இதனால், சுமார் 1½ கோடி பேருடைய வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கமுடியுமாம். 1½ கோடி பேருக்கு வேலைகொடுத்து, ஆலையின் சேவையால், நாட்டின் வளத்தைப் பெருக்கமுடியுமாம்.

இந்த இனிக்கும் சேதியைத் தெரிவிக்கிறார்! உடன், "ஆனால் அந்த ஆலைகள் யாவும் வடக்கிலே தானே ஒழிய, தெற்கில் அல்ல," என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

மூன்று ஆலைகள்!

ரூபாய் 500 கோடி!!!

1½ கோடி பேருக்கு வேலை.

திட்டம், தென்னாட்டிற்கு அல்ல—செப்புகிறார், டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்.

தென்னாட்டில், சேலத்தில், நல்லதொரு இரும்புத் தொழிற்சாலையை வைப்பதற்கான வசதி இருக்கிறது. நீண்ட நாட்களாக, எல்லோரும், வலியுறுத்தி வருகிறார்கள். இருந்தும், அவர், திட்ட வட்டமாகத் தெரிவித்திருக்கிறார், தெற்கில் எதுவும் கிடையாதாம்,

ரூபாய் 500 கோடி செலவில் கட்டப்படப்போகும் ஆலையென்றால், அது எவ்வளவு மிகப் பெரியதாக இருக்கும். ஒன்றரைக் கோடி பேருக்கு வேலை கிடைக்குமாமே.

அவ்வளவு பெரிய திட்டத்தில், தெற்குக்கு எதுவும் கிடையாதாம். தெற்கே, இரும்பு தயாராக இருக்கிறது, பூமிக்கடியில். ஆனால்,மனம் தானில்லை.

மூன்று ஆலைகளையும், கிழக்கே ஒன்று மேற்கே ஒன்று, தெற்கே ஒன்று என்று பிரித்தால்கூட, கட்டாயம் தென்னாட்டிற்கு ஒன்று கிடைக்கும். எனினும், கிடைக்காதாம். டில்லி, விரும்பவில்லையாம்.

வடக்கு, தெற்கைப் புறக்கணிப்பதுபற்றி, அடிக்கடி எடுத்துக்காட்டி வருகிறோம். அதன், உச்சக் காட்சி இது. உண்மையில். பண்டித நேரு, "வடக்கு தெற்கைக் கேவலமாக மதிப்பதாக ஒரு நம்பிக்கை, தெற்கே இருந்து வருகிறது. அதைப் போக்கவேண்டும்," என்று வெளிப்படையாகப் பேசியிருக்கிறார்.

இதனால், நமது குரலை, நேரு புரிந்துகொள்ளாமலில்லை. அதன் பொருள் என்னவென்பதை, அவர் நன்றாக அறிந்துகொண்டிருக்கிறார். எனினும், ரூபாய் 500 கோடியில், ஒரு 5 கோடிகூட கிடையாதாம், தென்னாட்டுக்குக் கிடையாதாம். செப்புகிறார், கிருஷ்ணமாச்சாரியார்-இதில், வியக்கக்கூடியது, அவரும் ஒரு தென்னாட்டார் என்பதுதான்.

★

7-ம் பக்க தொடர்ச்சி

இபற்ற காங்கிரஸ் சர்க்காருக்கு, ஏது அதிகாரம்?"

"விவாகரத்தை சட்டமாக்க இவர்கள் யார் என்று கேட்கிறேன்"

கேட்பவர், இந்துமகாசபையின் தலைவர், சாட்டர்ஜி! அதட்டிக் கேட்கிறார் பண்டிதரை, இந்துக்கள் விஷயத்தில் தலையிட நீங்கள் யார் என்று!! அதுமட்டுமில்லாமல், இப்படி 'ஏகலைவன், எம் பாட்டன்!' 'இராவணன் — எங்கள் மூதாதை!' என்றெல்லாம் ஆதாரம் காட்டி, இன உணர்ச்சிக்காகப் பாடுபடும் நம்மை இருமுனைகளில் ஒழிக்கவேண்டும் என்றும், ஒரு முனை இந்து மதத்தை வலுவாக்குவதும், இன்னொருமுனை சட்டமூலம் நம்மைக் கொட்டுவதும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

இந்துமகாசபைத் தலைவர், அவர்! அவர், அப்படித்தான் பேசுவார்!!

அதற்காக அல்ல, நாம் இதனைக் குறிப்பிட விரும்பியது. பண்டிதர் சிந்தித்துப் பார்த்து ஒரு பரிகாரம் காண வேண்டும் என்று கூறுகிற நேரத்திலே, அழித்தொழித்துத் தொலைக்கவேண்டும் என்று தோள் தட்டிக் கிளம்பும் இந்த 'சாட்டர்ஜி'களுக்குத் தென்னாட்டில், எங்கிருந்து ஆதரவு முளைக்கிறதென்பதை, எல்லோரும் கவனிக்க வேண்டும்.

டில்லியிலிருந்துவந்த அவருக்கு, சென்னை சென்ட்ரலில், அமோக வரவேற்பு அளிக்கப்பட்டதாம். வரவேற்பில் கலந்துகொண்டோர் யார் தெரியுமா? 'தினமணி' கூறுகிறது— முன்னாள் 'அட்வகேட் ஜனரல்' கே. ராஜா அயபர், பிரபல வக்கீல் வி. டி. ரங்கசாமி அய்யர், வக்கீல் கவுன்சில் காரியதரிசி வீரராகவன், வி. டி. சுந்தரராஜன், எம். ரங்கநாத சாஸ்திரி, முதலியோர்—என்று.

பண்டிதர் அந்த உணர்ச்சியைச் சிந்தித்து, போக்கிட வழி காண வேண்டுமென்று சொல்கிறார். அந்த உணர்ச்சியை அழித்து, இந்து மதத்தை பழைய நிலைக்குக் கொண்டுபோக வேண்டுமெனக் கூறுகிறார், இந்துமகா சபைக்காரர். அவரை, இங்குள்ள, மயிலையும் மாம்பலமும் வரவேற்கின்றன! பெரிய கூட்டங்கள் போட்டு ஆதரவளிக்க முற்படுகின்றன.

அந்த உணர்ச்சி—ஏகலைவனை பாட்டனெனக் கூறுவோரிடையில் ஏற்பட்டுள்ள அந்த உணர்ச்சியைப் பற்றி சிந்திக்கவேண்டுமென்கிறார், நேரு.

மதக்காவலர்களோ, பிரபலஸ்தர்களையும், 'பென்ஷன்' பேர்வழிகளையும் தேடிப்பிடித்து, தற்காப்பு தேட முனைகிறார்கள். அவர்கள், யார்? சொன்னால்—அதனை வகுப்புவாதம், என்பார்கள்! வசைமாரி பொழிவார்கள்!!– பண்டிதரும்கூட, அவர்களோடு. சேர்ந்து நம்மைத் திட்டத்தான் செய்வார்.

இது நிலைமை!

இன்றுமட்டுமல்ல, இதே நிலைமை, அன்று தொட்டு இந்நாட்டில் வேரூன்றப்பட்டு வந்திருக்கிறது.

அதனால்தான், இந்துமதத்தை நாம், கடுமையாக எதிர்க்கிறோம். ஒரு குலத்துக்கு ஒரு நீதி வழங்குவதெனக் கண்டிக்கிறோம்.

"ஜாதிமுறை, இந்து சமூகத்துக்கு மட்டுமல்ல, நாட்டுக்கே தீமை உண்டாக்குவதாகும். அதுதான், நாட்டின் முன்னேற்றத்துக்கு, முட்டுக்கட்டையாக இருந்து வருகிறது,"

என்று புதுடில்லியில் டிச, 20-ந் தேதி, அமைச்சர் ஜகஜீவன்ராம் குறிப்பிட்டாராம் — மலையாள சீர்திருத்தவாதி நாராயணகுருவின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டபோது! இதையே—முப்பது ஆண்டு காலமாகப் பணியாற்றும், சுயமரியாதை இயக்கமும் கூறிவருகிறது.

இந்த உணர்ச்சியைத்தான், எல்லோரும், எள்ளிநகையாடினர்— முன்பு. கிள்ளியெறிய வேண்டுமென்று, மயிலையும் மாம்பலமும், படைதிரட்டுகிறது, இன்று!! இந்த நிலையை, ஒரிசாவில் வாழும் ஆதிக்குடிகள், நாடகமூலம் விளக்கி வருவதாக, பண்டிதர் அறிவிக்கிறார்.

பண்டிதரின் பக்கத்திலிருப்பவர்களோ, "இந்து மதமே, இந்தியா முழுமைக்கும் ஒரே கலாச்சாரத் தொடர்பை உண்டாக்கக் கூடியது. ஆகவே, அதனை சீர்திருத்திக் காக்கவேண்டும்," என்று சொல்லுகிறார்கள். பண்டிதரின், புன்சிரிப்பைப்பெற்ற வண்ணமே, இவ்விதம் சொல்லுகிறார்கள்.

ஆனால், இந்த இந்துமதம் எங்கெங்கு வேரூன்றப்பட்டதோ, அங்கெல்லாம் அந்த மதத்தால் அழுத்தி வைக்கப்பட்ட இனம், தலைதூக்கப் போராடிடும். புது உணர்ச்சி மலராமலில்லை.

முன்பு! புத்தமதம், அதே புது உணர்ச்சியால்தான், பூத்தது. ஆனால், பார்ப்பனீயம் விரட்டியது, இந்த நாட்டைவிட்டு.

இன்று! புத்தமதம், வேறு உருவில், ஆங்காங்கும் வளராமல் இல்லை. அதன் ஒரு சித்திரமே, நாம்! நம்மை அமுக்கிவைத்த பார்ப்பனீயத்தை, இங்கே சாடுகிறோம். இதேபோல, கேரளத்தில் 'தாழ்ந்த சாதி' என்று பிறப்டுத்தப்பட்ட ஈழவ ஜாதியில் தோன்றி, ஒரு மறுமலர்ச்சி இயக்கத்தை உண்டாக்கினார், நாராயண குரு. அவரது கொள்கைகள், இன்று அங்கே "எஸ். என் டி. பி. யோகம்" எனும் பெயருடன் வளர்ந்து, அதன் நிழலில் சற்றேறக் குறைய ஐந்து லட்சம் பேர் திரண்டிருக்கின்றனர். இதே, இந்து மதத்தின் கொடுமைகள் பிடிக்காததால்தான், பஞ்சாபில் சீக்கிய மதம் உண்டாயிற்று—அன்று. "ஒன்றே குலம்! ஒருவனே தேவன்!" என்று முழக்கினார், குருநானக். இன்று அவருடைய சிடகோடிகள், பெரிய வீரர்களாய்த் திகழ்வது மட்டுமின்றி இந்திய அரசே மிரளுமளவுக்குப் பெரிய ஸ்தாபனமாகி இருக்கின்றனர்.

அண்மையில், அவர்கள் வாழும் கிழக்குப் பஞ்சாபிலுள்ள குருத்துவாரம் எனும் இடத்தில் ஸ்தல ஸ்தாபனத் தேர்தல் நடந்ததாம்— அதில், சீக்கியர்களுக்கெனத் தனியாட்சி விரும்பும், அகாலிதளம் அபாரமான வெற்றிகளைப் பெற்றிருக்கிறது. காங்கிரஸ் மூக்கறுபட்டிருக்கிறது!

"அந்த உணர்ச்சி"பற்றி சிந்திக்க வேண்டுமென்று, செப்புகிறாரே பண்டித நேரு. அவர், சில மாதங்களுக்குமுன்பு அகாலி தளத்தின் தலைவர் தாராசிங் மீது, தாவினார்! மோதினார்!! அதே தாராசிங், அங்கே, வெற்றிக்கொடி ஏந்தி — செயல் மூலம், பதிலளித்திருக்கிறார்.

## ஏஜண்டுத் தோழர்களுக்கு

★

**டிசம்பர் மாதப் பட்டியல் தொகையை அன்பு கூர்ந்து 8—1—55-க்குள் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.**

**பொறுப்பாளர்.**

# தேயும் தெற்கு!

தென்னாட்டில் நடத்தப்படும் இராமாயண நாடகத்திற்கு மூல காரணமான உணர்ச்சியைப் பற்றி சிந்திக்கவேண்டுமே தவிர ஆத்திரப்படக்கூடாது என்று தெரிவிக்கிருரே, பண்டித நேரு; இவரே தான் சில திங்களுக்குமுன்பு நம்மை, காட்டுமிராண்டிகளென்றும்,பித்தர்களென்றும் ஏசியவர்.

அவர், இன்று 'அந்த உணர்ச்சி,' ஏற்பட்டதற்கான, அடிப்படைகளை, ஆராய வேண்டுமெனத் தெரிவிக்கிருர்.

ஆராயவேண்டிய கட்டத்திற்கு, அவர் வருகிருர் — இப்போது! ஆனல், நாம் இந்த ஆராய்ச்சிகளையெல்லாம் தாண்டி, முடிவுதேட வேண்டிய கட்டத்திற்குச் சென்றுகொண்டிருக்கிருேம் — அதனுல்தான் மூலை முடுக்கெங்கும், நமது குரல், கம்பீரமாகக் கேட்கிறது!!

இந்த உணர்ச்சி, இன்று நேற்று எழும்பியதல்ல. ஆரிய மதம், முளைத்த காலத்திலிருந்து, இருப்பது; ஆனல், ஒருபோது, அந்த உணர்ச்சிகளை முறியடிப்பது ஆரியத்துக்கு சாத்தியமாயிருந்தது. ஆனல், இன்று, மக்கள், அந்த உணர்ச்சியைத் தைரியமாகக் கடைப்பிடிக்கிருர்கள்! அதற்கான காரணங்களை, பழைய புராண ஆதாரங்களிலிருந்தே, விளக்குகிருர்கள்!!

அதன் ஒரு கட்டம்தான், ஒரிசா ஆதிவாசிகளின், 'ஏகலைவன்' நாடகம்.

இழைக்கப்பட்ட அநீதியை, அந்த நாடகத்தின்மூலம் கண்டபோது, ஆதிக்கப்புரியினரின்மீது தனக்குக் கோபம் கோபமாய் வந்ததாகத் தெரிவித்திருக்கிருர், பண்டித நேரு.

அமுக்கப்பட்ட இன மக்களின் மீது, அதற்காக ஆத்திரமடையக் கூடாதென்றும், அறிவுரை வழங்கியிருக்கிருர்.

ஆனல், இங்கே! இதோ! ராமாயண நாடகம், நடத்தியமைக்காக நடிகவேள் ராதா கூண்டிலே அடைக்கப்பட்டு. வாரம், இரண்டாகிறது. அவர், கிடக்கிருர், சிறையில்! அரசோ, வாளாயிருக்கிறது!! நேரு, இந்தோனேஷியாவில், ஆசிய பிரச்னைகளை அலசிக்கொண்டிருக்கிருர்!!!

★

"நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்தை விரைவில் அபிவிருத்தி செய்தால் பல தொழில்கள் துரிதமாக முளைத்தெழும்" என்று அண்மையில் டாக்டர் அழகப்பச் செட்டியார் குறிப்பிட்டிருக்கிருர்.

"வடக்கு வாழ்கிறது; தெற்குத் தேய்கிறது" என்பதை நாம் பல முறை எடுத்துக்காட்டியிருக்கிருேம். "இந்தியாவைத் தென்னடு வடநாடு என்று பிரித்துப் பேசுவது என் வழக்கமில்லை. ஆயினும், தொழில் துறைகளின் அபிவிருத்தியில் தென்னடு புறக்கணிக்கப்பட்டிருப்பதாக இங்கு வாழ்கிற மக்கள் எண்ணுவதைச் சொல்லாமலிருக்க முடியவில்லை" என்று சென்ற ஆண்டில், திரு. கே. சி. ரெட்டி (இந்திய அரசாங்க உற்பத்தித்துறை அமைச்சர்) அவர்களை வரவேற்றுப் பேசுகையில், டாக்டர் அழகப்ப செட்டியார் அவர்கள் குறிப்பிட்டதை யாரும் மறந்திருக்க மாட்டார்கள்.

"தென்னட்டை வடநாடு சுரண்டுகிறது" என்று என் நண்பர் இராமசாமி நாய்க்கர் கூறிவருவது உண்மைதான என்று கூட நினைக்கும்படியாக இருக்கிறது" என்று சென்னை மாநில முன்னள் முதலமைச்சர் திரு. ராசகோபாலாச்சாரியார் கூட ஒரு சமயம் குறிப்பிட்டிருக்கிருர். "இன்று நேற்றல்ல, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகவே தென்னட்டார் மீது வடநாட்டாரின் ஆதிக்கம் இருந்துவந்திருக்கிறது என்பதைத் தென்னிந்திய மக்களுக்கு எடுத்துக் காட்டுவதும், மற்றொரு வர்ய்ப்பு ஏற்பட்டால் மீண்டும் இவ்வித ஆதிக்கம் ஏற்படும் என்று எச்சரிப்பதும், வட இந்தியர்களிடம் தென்னிந்திய மக்களுக்குள்ள அச்ச உணர்ச்சியுமே இவ்வித நாடகங்கள் நடைபெறுவதற்கு அடிப்படையான கருத்துக்களாகும்" என்று அண்மையில் "ராதாவின் இராமாயணம்" பற்றி இந்தியத் தலைமையமைச்சர் நேரு எச்சரிக்கை விடுத்துள்ளதும் அனைவரும் அறிந்ததே.

எனவே, "தென்னடு வடநாடு என்று பேசுவது குறுகிய மனப்பான்மை—மாகாணப்பித்து—ஒற்றுமையைக் குலைப்பது" என்று முழங்குவதில் பொருளில்லை— அதைக் குற்றம் கூறுவது அறியாமையின் பாற்பட்டது என்பதை யாரும் மறுத்தற்கில்லை. ஆதலின். "தெற்கையும் திரும்பிப் பாருங்கள்" என்று கூறுவதை யாரும் தவருகக் கருதமுடியாது— கருதவும் கூடாது,

அண்மையில், தமிழ்நாட்டைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்திய அரசாங்கத்திடம் ஒரு மனுவைக் கொடுத்திருக்கின்றனர். உத்தேசத்திலுள்ள எஃகுத் தொழிற்சாலைகளில் ஒன்றை சேலத்தில் நிறுவுமாறு அவர்கள் அம் மனுவில் கேட்டுக்கொண்டிருக்கின்றனர். ஒரு எஃகுத் தொழிற்சாலையை நிறுவுவதற்குத் தேவையாக உள்ளவை அனைத்தும் சேலத்தில் இருக்கின்றன என்றும் தென்னுற்காட்டில் – நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி கிடைப்பதால் தொழிற்சாலைக்கு அருகே எரிபொருள் கிடைக்கவேண்டும் என்ற நிபந்தனை விரைவில் பூர்த்தியாகிவிடும் என்றும், சேலத்தில் கிடைக்கும் இரும்புத் தாதுப்பொருள் இரும்பு உற்பத்திக்கு விசேடப் பொருத்தமுள்ளதாக இருக்கிறதென்றும் இம் மனுவில் கூறப்பட்டிருக்கிறது.

மத்திய அரசியலார், தென்னட்டின் தொழில் வளத்தை ஒரு சிறிதாவது அதிகரிக்கும்படி செய்யக் கூடிய இக் கோரிக்கையில் அலட்சிய மனோபாவம் காட்டாமல் ஆவன செய்ய முன்வருவதே தென்னட்டார் வடநாட்டார்மீது கொண்டிருக்கும் வெறுப்புணர்ச்சியை ஓரளவு தணிப்பதற்குரிய செயலாகும் என்று குறிப்பிட விரும்புகிருேம்.

—[வாரச் செய்தி]

★

தொடர் சித்திரம்

# கடிகாரம்

அண்ணல்

8

"வாழ்க்கை என்பது கண்ணாடித் தட்டிலே ஓடும் நீரோட்டமல்ல; மேடு பள்ளங்கள், திடீர்ச்சரிவுகள், தேங்கி நிற்க வேண்டிய கட்டங்கள் நிரம்பிய நதி. மலைமாதாவிடமிருந்து பிறக்கும் ஆறு, கடலில்தான் சங்கமமாகிறது. ஆனால், அதற்குள் அது சந்திக்கும் சம்பவங்கள் எத்தனை!—பிரிந்து செல்லும் சிற்றாறுகள்! வந்து கலக்கும் வாய்க்கால்கள்! அணைக்கட்டுகள்! திடீரெனச் சரிந்து விழும் மரக்கிளைகள்! விழுந்து கரையும் மணற்பாறைகள்!—எவ்வளவு ஏற்படுகின்றன, ஒரு நதிக்கு. அதைப் போலத்தான் மனித வாழ்க்கையும். நதியில் வெள்ளம் கரை புரள்வதுபோல நமக்கும் உண்டு; மணல் வெளிபோல சில சமயம் கிடப்பதும் உண்டு", இவ்வாறெல்லாம் கேட்டிருக்கிறேன், அப்போது! அக்கிரகாரத்து ஐயர் என்று சொன்னேனே, அவரும்—பெயர் அனந்தராமய்யர் என்று ஞாபகம்—அப்பாவும் அடிக்கடி வீட்டுத் திண்ணையில், இப்படிப் பேசிக் கொள்வார்கள்! அது என் கவனத்துக்கு வருகிறது. எல்லோருடைய வாழ்க்கையையும் நதியோடு ஒப்பிட்டால், என்னை, காவிரியென்றோ, வைகையென்றோ, பெண்ணாறு என்றோ, கொள்ளிடம் என்றோ கூற முடியாது! நான், பாலாறு. எப்போதும் தண்ணீரே இல்லாது கிடக்கும் அந்த ஆற்றுக்குக்கூடப் பாலம் கட்டுகிறார்களாம், பல இலட்சங்களைக் கொட்டி. சென்னையிலிருந்து வேலூர் போகும்வழியில் அந்த ஆற்றின் மேலிருக்கும் 'ராஜாஜி' பாலத்தை, நிலவுக் காலத்தில் பார்க்கப் பிரமானந்தமாயிருக்குமாம். ஆனால், என்னுடைய வரண்ட வாழ்க்கைக்கு அந்தப் பாக்கியம் கூட இல்லை! என்னுடைய வாழ்க்கை, ஜீவநதியுமல்ல; பாலாறுமல்ல; பெரியபாலைவனம்!! பெரிய பண்ணையாரின் வயிற்றில் பிறந்த பெண்ணான நான், எப்படி இக்கதிக்கு வந்தேன்?—ஆவலோடு இருப்பீர்கள் அறிய. சீராட்டிப் பாராட்டி வளர்க்கப்பட்ட செல்லக்கிளி, 'இட்லி'க் கடையே சதம் என வாழ்ந்தேன்! என்ன காரணம்? ஏதோ ஒரு சினிமாவில் ஒரு வசனம் இருந்தது—"தமிழ் நாட்டில் தாலியறுத்தவர்களுக்கெல்லாம் அது தானே தாசில் உத்யோகம்!", என்பதாக. நான் தாலியறுத்தவளுமல்ல! தாலியை அறிந்தவளுமல்ல!! எனினும், 'இட்லி'க் கடைக்கு வந்தேன். இதற்குக் காரணம், எங்களூர் அக்கிரகாரத்து அய்யரின் புதல்வன் ஜெயமணிதான்!

அப்பா, அந்த வட்டாரத்துக்கே பெரிய பண்ணை என்று சொன்னேனல்லவா? அவருக்கு அபரிமித செல்வாக்கும், அந்தஸ்தும் இருந்தது உண்மைதான். ஆனால், பிறகுதான் தெரிந்தது! நாற்பது வேலி நஞ்செய் புன்செய்களுக்கு அவர், ஏகப் பிரதிநிதியே யொழிய, சொந்தக்காரர் அல்ல என்கிற உண்மை. நாற்பது வேலி நிலமும், நூறு பண்ணையாட்களும் அவருக்கு இருந்தது உண்மை! நாங்கள், கிராமத்திலேயே மிகப்பெரிய வீட்டிலும் இருந்தது உண்மை!! ஆனால், அவை யாவும் எங்களுக்குச் சொந்தமானது அல்ல. சொந்தக்காரர் பம்பாயிலோ, சென்னையிலோ, இருந்தார்! அப்பா, அவருக்காக இங்கே பிரதிநிதிபோல இருந்தார்!! அப்போது, இதையெல்லாம் நான் என்ன கண்டேன்? அடிக்கடி அப்பா, பட்டணத்துக்குப் போய்விட்டுவருவது மட்டும் தெரியும். அப்படி போய்விட்டு வரும்போதெல்லாம், எனக்கு ஏராளமான விளையாட்டுச் சாமான்கள் வாங்கிவருவார். அதற்காகவே, அடிக்கடி 'அப்பா! எப்போது பட்டணத்துக்குப் போகிறீர்கள்?,' என்று நான் கேட்பதுண்டு. அப்பா, விளையாட்டுச் சாமான்கள் வாங்கிவந்ததும், என்னையொத்த சிறுவர்களுக்குக் காட்டி எவ்வளவு சந்தோஷப்படுவேன், தெரியுமா?

ஒரு தடவை, அப்பா, சிறு கிளிக்கூண்டு வாங்கி வந்திருந்தார். உள்ளே, கிளி; வெளியே கூண்டு—செலுலாய்டில் செய்ததுதான். மிகவும் அழகாயிருந்தது! தூங்கும் போதும், நடக்கும்போதும், அது என் கையிலேயே எப்போதும் இருக்கும். அதைக்கண்டு அக்கிரகாரத்து அய்யர் கூடச்சொன்னார், "என்னகொழந்தே! கூண்டிலிலே, அடைபட்டிருக்கிற கிளி மேலே இவ்வளவு உசிராயிருக்கியே... ஊம்! விளையாடு! விளையாடு! எத்தனை வருஷத்துக்கு விளையாடமுடியும்? வயசுவந்து, உனக்கும் ஒரு கலியாணம் ஆயிட்டா, குடும்பம் என்கிற கூண்டு, உள்ளே கிளிபோல நீ......! எல்லாப் பெண்ணுக்கும் அதுதானே முடிவு?," என்றார். இதைக் கேட்டபோது, அப்பா, சிரித்தார்! நானுந்தான்!!

எவ்வளவு அழகான கிளி. அதைச் சுற்றி, சிவப்பு—பச்சை—ஊதா—மஞ்சள், கலர்களில் எவ்வளவு வேடிக்கையான கம்பிகள். இந்த கிளிக்கூண்டை ஜயமணியிடம் காட்டினேன். எங்கள் பள்ளிக்கூடத்திலேயே, அவன்தான் பெரியவன். அதனால். அவன்தான் சட்டாம்பிள்ளை. பள்ளிக்கூடம் என்றதும், உங்களுக்கு அழகான கட்டிடம், அதைச் சுற்றி காம்பவுண்டு, சின்னஞ்சிறு விளையாட்டு மைதானம் — இவை தானே கவனத்துக்கு வருகின்றன? தேனூர் பள்ளிக்கூடம் இருந்தது, சுந்தரமூர்த்தி ஓதுவாரின் வீட்டுத் திண்ணையில்! நான் அரிச்சுவடியில் சேர்க்கப்பட்டதும், சட்டாம்பிள்ளை தான், எனக்கு வாத்தியார். தரையில் நிறைய மணல் கொட்டப்பட்டிருக்கும்; அதில் "ஹ" என்று சட்டாம்பிள்ளை ஜயமணிதான் — எழுதுவார். அந்த எழுத்தின்மேல், என் விரலை வைத்து, அழுத்தித் தேய்ப்பார், சட்டாம்பிள்ளை! அதாவது, எனக்கு எழுத்தைச் சொல்லித் தருகிறார்களாம்!! புரியாத ஒன்றையும், உளருவார்கள் — "ஹரிநமோத்து சிந்தம்!"—என்ன அர்த்தமோ? யாருக்குத் தெரியும்! இந்த வேதனை, முதலில் இரண்டு மூன்று தினங்கள், எனக்கு வேடிக்கையாயிருந்தது. பிறகு, கைவலி, தாங்கமுடியவில்லை. அப்பாவிடம் சொன்னால், "எங்கே பள்ளிக்கூடம் போகவேண்டாமென்று தடுத்துவிடுவாரோ?", என்று பயம். வீட்டிலிருப்பதைவிட பள்ளிக்கூடத்தில் விளையாட நிறைய குழந்தைகள் கிடைத்தார்கள்! அதிலும், சட்டாம்பிள்ளை ஜெயமணிமீது, எனக்கு ரொம்ப ஆசை.

அப்பா வாங்கிக்கொண்டுவந்த கிளிக்கூண்டை, ஆசையோடு ஜெயமணியிடம் காண்பித்தேன். அவன் என்ன செய்தான் தெரியுமோ? வெளியேயிருந்த கம்பியை ஒடித்து, உள்ளேயிருந்த கிளிப் பொம்மையை உடைத்து, வீசி எறிந்துவிட்டான்! எனக்கு, கோபம், அழுகை, எல்லாம் வந்தது. "அப்பாவிடம் சொல்லி உன்னை என்ன செய்கிறேன், பார்!", என்பேன். "போடீ! அழுமூஞ்சி. யாராவது கிளியைக் கூண்டிலே, அடைக்கலாமோ? அப்படி அடைக்கிறது தப்புன்னு எங்க பட்டணத்து மாமா சொல்றார். பாபமாம், அது! இப்ப, நம்ப தேசம், இந்தக் கிளியைப்

போல அடைபட்டுக் கிடக்குதாம். எங்க மாமா சொல்றார். நம்ப தேசம் அடைபட்டுக் கிடக்கலாமோ?", என்றான். தேசம் என்றால் என்ன என்று எனக்குப் புரியவில்லை! அவனும் சொல்லவில்லை!! ஆனால், அழகான பொம்மை, உடைந்ததுமட்டும் நன்றாகத் தெரிந்தது. ஜெயமணியின் மாமாவை எனக்குத் தெரியும். பள்ளிக்கூடத்துக்குப் போகும்போது நான் அவரைப் பார்த்திருக்கிறேன். வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்தபடி, யாரிடமோ, சண்டை போடுவதுபோலப் பேசுவார். சண்டை போட்டிருக்கமாட்டார்! தலையிலே ஒரு வெள்ளைக் குல்லாய் வைத்திருப்பார்! அடிக்கடி, 'காந்தி மகாத்துமா, காந்தி மகாத்துமா' என்பார்!! அவர் சொல்கிற தேசத்துக்கும், என் கிளிக்கூண்டுக்கும் என்ன சம்பந்தம்? விளங்கவில்லை, எனக்கு!

வாயில் வந்தபடி திட்டினேன் — அழுதபடி அப்பாவிடம் போய்ச் சொன்னேன். சொன்னேனா? தவறு! தவறு!! அலறினேன். விளைவு, அனந்தராமய்யர், 'ஜெயமணி'க்குப் 'பூசை' போட்டாராம். அன்று முழுமையும் அவன் பள்ளிக்கூடத்துக்கு வரவில்லை. எனக்கு என்னமோ போலிருந்தது.

குழந்தைகளின் மனதை மலருக்கு ஒப்பிட்டுச் சொல்கிறார்களே — அது, முழுக்க முழுக்க உண்மை. அன்பு வெயில் கண்டால், எவ்வளவு சீக்கிரம் மலர்ந்துவிடுகிறது! இந்த மலர் இதயம், மனிதர்களின் வாழ்நாள் முழுதும் இருந்துவிட்டால்......? நான் இப்படியாவேனா! நீங்கள்தான், என் எதிரில், கத்தியை ஓங்கியபடி. 'உண்மையைச் சொல்', என்று நிற்பீர்களா?

அந்த ஜெயமணி, பெரியவனானான். நானும்தான். ஆனால், நான் எங்கள் கிராமத்துப் படிப்போடு இருந்துவிட்டேன். அவனோ, பட்டணத்துக்கு மாமாவுடன் போய் படித்தான்; விடுமுறையில், வருவான். இருவரும் சந்திக்கத் தவறமாட்டோம். சிறு வயதிலே பார்த்த ஜயமணியா; அவன்? இல்லை, இல்லை. எவ்வளவு வளர்ந்துவிட்டான்—என்னென்ன பேசுகிறான். அவனுடைய அப்பா, எங்கள் வீட்டுத் தண்ணீரைக்கூடத் தொடமாட்டார்; ஆனால், இவனோ, எது கொடுத்தாலும் வாங்கிச் சாப்பிடுகிறான். ஜாதியாவது—மதமாவது—இதெல்லாம், கூடாது என்று மகாத்மா காந்தியே சொல்லியிருக்கிறார்—இந்த ஜாதிதான், நமது தேசத்தைப் பிடித்திருக்கிற பீடை— என்றெல்லாம், பேசுவான்.

இப்படி என்னிடம் பேசியதோடில்லை, அவன்! பிறகோர்முறை ஊருக்கு விடுமுறைக்கு வந்தபோது, காந்தி மகாத்மாவின் சிஷ்யர் ஒருவருடன் வந்திருந்தான். அவரை வரவேற்க, எங்கள் ஊரே திரண்டிருந்தது! அவரும், அனந்தராமய்யர் வீட்டில்தான் தங்கியிருந்தார். அரிசி, காய்கறி, அது இது, என்று அப்பா கொண்டுபோய்க் குவித்தார். நானும் சந்தடிசாக்கில் ஜயமணியைப்போய்ப் பார்க்கத் தயங்கவில்லை! எங்கள் கிராமத்தில் கூட்டம் கூடப்போட்டார்கள். அதிலே, ஜெயமணியும் பேசப்போவதாகச் சொன்னார்கள். வேடிக்கை பார்க்க ஏராளமான, கூட்டம். அதிலும், வெள்ளைக்காரனை எதிர்த்து, எங்கள் கிராமத்தில் கூட்டமாம்—அதனால், ஏராளமான போலீஸ்காரர்களும் வந்திருந்தார்கள். ஒரே ரகளையாயிருந்தது, ஊரில்! போலீஸ் அதிகாரிக்குக்கூட, அனந்தராமய்யர் வீட்டில்தான் விருந்து நடந்தாம். இருந்தும், அன்றைய கூட்டத்தில், அந்த மகாத்மாவின் சிஷ்யரோடு, என் ஜயமணியையும் போலீசார் பிடித்துக்கொண்டு போயினர்.

"யுத்தத்துக்கு பணம் கொடுக்காதே," என்று காந்திமகாத்துமாவின் சிஷ்யரும், ஜயமணியும் மேடையிலே ஏறி நின்று சொன்னார்களாம்-சொன்னது யாருக்கும் சரியாகக்கூடக் கேட்கவில்லை—அதற்குள், பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள். அவர்களைப் பிடித்துக்கொண்டு போனபோது, ஜனங்களெல்லாம், ஆவேசம் வந்தவர்கள்போல் கூச்சலிட்டார்கள். நான் கூட, வெட்கத்தை மறந்து, 'ஜே, ஜே.' என்று கத்தினேன். என்னுடைய ஜெயமணியைப்பற்றி, எல்லோரும் பேசுவது எனக்கு மகிழ்ச்சியாயிருந்தது. "இப்படி தேச சேவையில் என்மகன் ஈடுபடநேர்ந்தது—பெரிய பாக்கியம்," என்று அனந்தராமய்யர் கூட, பரமானந்தத்தோடு, அப்பாவிடம் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தார்.

அப்பேற்பட்ட ஜெயமணி, சிறையிலிருந்து திரும்பி வந்ததும் என்ன செய்தான் தெரியுமோ? "நீ வேறு ஜாதி—நான் வேறு ஜாதி—உன்னைக் கல்யாணம் செய்துகொள்ளமாட்டேன்," என்று சொல்லியிருப்பான்— என்று தானே எண்ணுவீர்கள். அப்படியெல்லாம், சொல்லவில்லை. அதற்குப் பதிலாக, எங்கள் வீட்டை இடித்து, அப்பாவும் நானும் வீதியில் நிற்கவேண்டிய அளவுக்கு வேதனையை உண்டாக்கினான்.

ஜெயமணியா? அகிம்சையை ஆத்மகொள்கையாகக் கொண்டவனா? சிறையிலிருந்து வந்த பிறகு. அப்படிச் செய்தானா?—என்ன விரோதம் ஏற்பட்டது—உங்கள் அப்பாவுக்கும் அவனுக்கும்? — என்றெல்லாம், கேட்கத் தோன்றும். அவன்தான் செய்தான். என் அப்பாவின் சுண்டுவிரல் காணமாட்டான் அவன். ஆனால், அவனால், எங்களை நடுத்தெருவில் நிறுத்த முடிந்தது. என் அப்பா, அவனை ஒரு முறைகூடக் கோபித்துக் கொண்டது கிடையாது — நாங்கள் குடியிருந்த வீடு இடிக்கப்பட்ட அன்று மாலை கூட, நானும் அவனும்......உங்களுக்கேன் அந்த விபரம்?......அவன்தான், அப்படிச் செய்தான். என்ன காரணம் தெரியுமோ?

அப்பா—ஒரு முதலாளியாம். அவர், ஏழைகளின் இரத்தத்தைச் சுரண்டி கொழுக்கிறாராம்.—இப்படிப் பேசிய வண்ணம், இரவு நேரத்தில், எங்கள் அப்பாவிடம் வேலைசெய்த பண்ணையாட்கள், அர்த்தராத்திரியில் புகுந்து, வீட்டையும் தாக்கி, இருந்ததையும் கொள்ளை அடித்துக்கொண்டு போயினர். பிறகு தெரிந்தது. மூன்று வருஷங்களுக்கு முன்பு, காந்திமகாத்துமாவின் கட்சி என்று சொல்லிக்கொண்டு ஜெயிலுக்குப் போன ஜெயமணி—இப்போது, வேறு ஏதோ கட்சியிலிருக்கிறான், என்கிற செய்தி.

எந்தச்செய்தி வந்தென்ன-அனந்தராமய்யர் எப்போதும் போலத்தானிருந்தார்—ஆனால், அப்பாவுக்குத்தான் வேலை போயிற்று. பண்ணையாட்களைச் சரிவர நடத்தத் தெரியவில்லை என்று சொல்லி, நிலத்தின் சொந்தக்காரர், அப்பா நீண்டகாலம் வகித்து வந்த வேலையைப் பிடுங்கிக் கொண்டார்.

வில்வண்டியில்லை; எடுபிடிகளும் இல்லை; வீடும் இல்லை; மாடும் இல்லை— என் அப்பாவைப்பார்த்து, 'முதலாளி, ஒழிக', என்றார்களே எங்கள் பண்ணையாட்கள். இப்போது என்ன சொல்வார்கள்? அவர்களது தலைவனான ஜெயமணி—ஆனந்தமாகப் பவனி வருகிறான். ஆனால்; அப்பா......திண்டாடுகிறார்—அவருக்கு இருந்த அந்தஸ்து, மரியாதை, எல்லாம், 'ஓர் இரவில்' பறந்துவிட்டது. ஆனால், நிலத்தின் மூலம், வருடா வருடம் ஏராளமான பணத்தை பட்டணத்திலிருந்தே கொட்டிக் கொள்ளும், சொந்தக்காரனுக்கோ, இதனால் எவ்வித நஷ்டமும் இல்லை. வந்தான்! விவசாயிகளுடன் பேசினான்; புது ஆள் ஒருவரைப் போட்டான்—விவசாயிகளும் வெற்றி விழா கொண்டாடினார்கள்—ஜெயமணி கூடப் பேசினான்.

ஆனால், ஜெயமணியின் குடும்பத்துக்கு எவ்வளவோ விதத்தில் உதவிய அப்பா, அவனைக் காதலிக்கும் நான், யாருக்கு என்ன கேடு செய்தோம்? ஒன்றுமில்லை. எனினும், இந்தக் கதி நேர்ந்தது......ஊர் மெச்ச வாழ்ந்தோம்; இன்று, ஊர்க்கோடியில், ஒரு ஓலைக் குடிசைக்குப் போகலானோம். சுருக்கமாகச் சொல்லிவிட்டேன் — ஆனால், அதில் எவ்வளவு சோகமின்னல்கள் உண்டு தெரியுமா? இத்தனைக் கோளாறுக்கும் யார், காரணம்—ஜெயமணி; அவனைக் கண்டால், அப்படியே குரல் வளையைப் பிடித்துக் கொன்றுவிட வேண்டும்—என்கிற ஆத்திரம், எனக்கு. ருசிகண்ட பூனையல்லவா? என்னைச் சந்திக்க வராமலா இருப்பான்! பார்க்கிறேன், ஒரு கை!!

(வளரும்)

1-ம் பக்கத் தொடர்ச்சி

அல்ல! அல்ல!! பக்தாமிருதம், இது. உண்மையாக நடந்ததாம்! இல்லையென்று மறுக்க, உங்களையும் என்னையும் விடமாட்டார்கள், பக்தர்கள்!!

ஏனெனில் வளையலைப் பூட்டிய யோகீஸ்வரரைப்பற்றி மட்டுமல்ல, அந்த வளையலை அணிந்துகொண்ட அம்மணியையும், அகில உலகமெங்கும் விளம்பரப் படுத்தியிருக்கின்றனர்-நமது, வேத விற்பன்னர்கள்.

ஜகன்னாதரை மனைவி கேட்கிறாள், சராசரி குடும்பங்களில்! மகானே, மனைவி கேட்காமலேயே, வளையல் அணிவிக்கிறார்!! வாய்ப்புள்ள, மகான் தான். வாய்ப்புள்ள மனைவிதான்.

அவர் கேட்டார்—அவ்வளவுதான்!—ஓடினர், சிஷ்யகோடிகள். ஒருவர் கூடச் சிந்தித்தாரில்லை! பொன்னையும் மண்ணையும் ஒப்பநோக்கும் உள்ளம் கொண்ட நமது குருநாதருக்கு, ஏன் வளையல்கள்? இகலோக இச்சைகளைத் துறந்து மக்களை பரமனின் பாதகமலங்களுக்கு இட்டுச் செல்லும் புண்யத் திருப்பணியிலீடுபட்டிருக்கும் பூதேவரல்லவோ, அவர். ஏன், வளையல்! அதுவும், மணி பொதித்த வளையல்!!—கேட்டாரில்லை, சீடர்கள். அப்படிக் கேட்டிருந்தால், அவர்கள் சீடர்களாகவா, இருந்திருப்பர்!!

மகான், மனைவியின் கரத்தைப் பிடித்து, வளையலைப் பூட்டினார்.

மகானின் மனைவியும், சாதாரண மானவரல்ல! முற்றும் துறந்த முனிவரைத் தொல்லைசெய்யும், 'மாயப் பைசாசம்,' அல்ல — மகானுக்கேற்ற மாது. இகலோக இச்சைகளைத் துறந்த, 'மங்கை'! உடலின் பத்தை உதறித் தள்ளிய, உலக அன்னை!! கணவனின் வழியே தன் வழி—அவர் ஆத்ம ஞானியாகிவிட்டாரா? அதுதான் எனக்கும் வழி! என்று, ஐயனின் திருநாமப் பஜனைக்குத் தன்னை அர்ப்பணித்துவிட்டவர்; சராசரி பெண்ணல்ல—சாதுவின் மனைவி! சாதுக்கேற்ற மனைவி!! எனவே, ஜகன்னாதரின் மனைவிபோல, அதுவேண்டும், இதுவேண்டும் என்று நச்சரிக்கும் குணம்படைத்தவரல்ல, நாதனைப் பார்த்து வளையல் கேட்டிருக்கமாட்டார்-கதைப்படியும், கேட்கவில்லை. ஆனால், அம்மை கேட்காமலே, நாதர் வாங்கி அணிவிக்கிறார்! அப்படி அணிவிக்கும்போது அம்மையாவது கேட்டிருக்கலாமல்லவா, "நாதா! நகை ஏன் எனக்கு? நானென்ன குடும்ப சாகரத்தில் கிடந்துழலும் சம்சாரியா! எனக்கேன் பொன்னாபரணமும், மணி வளையலும்? துறவிக்குத் துரும்பும் ஒன்றுதான்! தங்கமும் ஒன்றுதானே!!" — எனக் கேட்டிருக்கலாமல்லவா? கேட்கவில்லை!

ஜகன்னாதரின் மனைவியைச் சந்திப்போம்-கணவன், எப்படியோ வளையல் வாங்கிப் போட்டதாக வைத்துக்கொள்வோம்—வாழ்ந்தார்கள் நீண்டகாலம் எனவும் கொள்வோம் — கடைசியில், ஜகன்னாதர் காலமாகி, அம்மையும் விதவையாகிவிட்டார் என வைத்துக் கொள்வோம். புருஷன் இறந்த பிறகும், அவர், வளையலைக் கழற்றாமலும், அலங்காரங்களை விடாமலும் இருந்தால் ஊர் என்ன சொல்லும்? ஏசும்! பேசுமல்லவா!! ஆனால், நமது யோகியின் மனைவியாருக்கு, அப்படிப்பட்ட ஏச்சும் பேச்சும் கிடைக்கவில்லை—கணவர் இறந்தபிறகும் கைவளையல்களைக் கழற்றவில்லை, ஆடம்பரங்களை அகற்றவில்லை-அப்படிச் செய்யாததே, ஒரு மகாத்மியமாகக் கூறப்படுகிறது, உலகால்! அவரது சிஷ்ய பரம்பரையால்!! யார் இந்த யோகி? யார் அவர் மனைவி?-என்று கேட்பீர்கள். இதோ, சுவாமி ருத்ரானந்தர எழுதுகிறார், "தம்முடைய சிஷ்யர்களின் உதவியால் அவ்வளையல்களைப் போன்றதான வளையல்கள் புதிதாகத் தயாரிக்கச் செய்து, அன்னை சாரதாவின் கைகளில் அவற்றை அணிவித்து அவர் ஆனந்தம் கண்டாராம்! மேலும் வேடிக்கையாகப் பேசித் தமது சிஷ்யர்களை மகிழ்விக்க எண்ணி, "கட்டழகியான என் மனைவிக்கு கணவனான யான் கை நகை போடுவது கடமையே அன்றோ!", என்றாராம். நீங்களும் நாமும், நமது மனைவிகள் கையில் வளையல்களை வாங்கிப் போட்டு, அதைப்பற்றி இப்படி நாலுபேர் மத்தியில் பேச முடியுமா? பேசினாலும் எவ்வளவு கேலி செய்வார்கள்!! ஆனால், நமது யோகீஸ்வரரின் பல மகாத்மியங்களில் ஒன்றெனக் கருதப் படுகிறது-சுவாமி ருத்ரானந்தாக்கள் போற்றிப் புகழும் வகையில்!! வளையல் பெற்றவர், சாரதா தேவி! வாங்கிப் பூட்டியவர் ராமகிருஷ்ணபரமஹம்சர்!!

அன்மையில், வளையலணிந்த இந்த 'அன்னை'யாரின் நூற்றாண்டு நாள், வெகு சிறப்பாகக் கொண்டாடப் பட்டது-ஆங்காங்கும். ஏடுகள், விசேஷ கட்டுரைகளைப் போட்டு, பிரசுரித்தன. நமது மந்திரிமார்கள்கூடப் போய்க் கலந்துகொண்டார்கள்.

ராமகிருஷ்ண பரமஹம்சரின் பேராலும், அவரது மனைவி சாரதா தேவியின் திருநாமத்தாலும் நாட்டில் பல நற்காரியங்கள் நடைபெற்று வருவதை, அறிவோம். அவர்களை, இகழவும், தூற்றவும் அல்ல, நாம் விரும்புவதும் — அவரது மகாத்மியத்தைப் பரப்ப, கையாளப்படும் கதைகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டுகிறோம். வளையல் வேண்டும், என்றாரல்லவா, ராமகிருஷ்ணர்! ஏன், கேட்டார் தெரியுமா? ஒருநாள் கடுந் தவத்திலிருந்தபோது, சீதாபிராட்டியார் காட்சி அளித்தாராம்! இராவணனால் தூக்கிச் செல்லப்பட்டு, சிறை வைக்கப்பட்டிருந்தாரே, அந்தச் சீதாபிராட்டியார்தான்!! அவரைக் கண்டாராம், ராமகிருஷ்ணர். லோக மாதா, சீதா!—புராணீகர்கள், கருத்துப்படி. அந்த அன்னையைக் காண்கிறார் பக்தர். மெய் எவ்வளவு உருகும்! கண்கள் ஆனந்தபாஷ்பமல்லவோ பொழியும்!! — அப்படித்தானே, ஒரு மகானுக்கேற்படும் கடவுளைக் காணும்போது. அந்தக் காட்சியைப் பக்தர்களுக்குச் செப்பும் சீடகோடிகளும், அப்படித்தானே சொல்லுவார்கள். ஆனால், ராமகிருஷ்ணர், அந்தளவோடு இருந்துவிடவில்லையாம் — அன்னை சீதா, கட்டியிருக்கும் புடவை என்ன கலர் உள்ளது, காஞ்சீபுரம் நெசவா, பனாரஸ் பட்டா என்று பார்த்தார் என்பதுபோல, சீடர்கள் வர்ணிக்கின்றனர் — சுவாமி ருத்ரானந்தா சொல்லுகிறார், "அம்மாதின் எழிலையும், கருணை நோக்கையும் கண்ட ராமகிருஷ்ணர், அது சீதையின் வடிவேயென ஓர்ந்தார். அந்தத் திவ்யக் காட்சியில் திளைத்திருந்து ஆனந்தம் அடைந்தார். இதைப்பற்றிப் பின்னொருகால், தமது சிஷ்யர்களிடம் பேசும்போது, சீதையின் கைகளில் மணிகள் இழைத்த வளையல்கள் பொருந்தியிருந்ததைத் தாம் கண்டதாகக் கூறியுள்ளார்!!

அதனாலேயே, தன்னுடைய மனைவி சாரதாவுக்கும், அப்படிப்பட்ட "வளையல்கள் வேண்டும்! வேண்டும்!!", என்று விரும்பிப் பூட்டினாராம். அப்படிப் பூட்டிய வளையல்களை, கணவர் இறந்தபின், சாரதாமணியார் கழட்ட எண்ணினாராம். அதுபற்றியும், சீடர் எழுதுகிறார், "விதவைகளாகும் ஸ்திரீகள் வழக்கமாய் அனுஷ்டிப்பதைப் போல, அன்னை சாரதா தேவி, உலக ஆச்சாரத்தை அனுசரித்துத் தமது கைவளையல்களை நீக்கிவிட எத்தனித்தார். ஆனால், என்ன ஆச்சரியம்! தக்ஷணமே, இராமகிருஷ்ணர் அன்னையின் முன் தோன்றி, அன்னையின் கையைப் பற்றியவராய், "என்ன? நான் இறந்துவிட்டேன் என்று நினைக்கிறாய்?" என்று கூறிப் புன்முறுவல் பூத்த முகத்துடன் மறைந்தார். அதனால், உல ஆசாரத்தையும் மீறி அது முதல் கடைசிவரையிலும், கைவளையை நீக்காமலும், கரையில் சிவந்த மெல்லிய கோடிட்ட வஸ்திரத்தையே புடவையாக உடுத்தியும் வந்தார்கள்." எப்படி விளக்கம்! ராமகிருஷ்ணரின் பெருமையை விளக்க எப்பேற்பட்ட சம்பவம்!!

*

பக்தாமிருதம் படைக்க எண்ணும் ஆசையில், நமது மதக்காவலர்கள் சிருஷ்டிக்கும் கதைகள், அனந்தம்! அவைகளைக் கதைகள் என்று

சொல்லி விட்டோமோ — வந்தது, அனர்த்தம்!! பிடி—அடி—பேசு—ஏசு, என்று எத்தனை, 'குன்றக் குடிகள்' கிளம்புகின்றன.

ஆண்டவனுக்கும் அடியார்களுக்கு மிடையே உள்ள பாசத்தையும் நேசத்தையும் விளக்க, எழும்பிய கதைகள் ஒவ்வொன்றும், விசித்திர விசித்திர மானவை.

ராமகிருஷ்ணபரமஹம்சரை, நீங்கள் பார்த்திருக்கலாம்-படங்களில்! தோற்றமே, பரிதாபமாயிருக்கும்!! ஐயோ, பாபம்—என்று தோன்றும். ஆயினும், அவரைப்பற்றிய கதைகளை, ஆராயும் போது, எதை எதையோ கிளறத்தானே, நேருகிறது.

வளையல் வரலாறு!—இருவரின் மகாத்மீயத்தை, விளக்க. இந்த மகாத்மீயங்களை மக்கள் என்றும் மதிப்பார்கள்—எனும் துணிவில்தான், நமது புராண ஏடுகளிலும் ஏராளமான கதைகளை இஷ்டம்போல் தூவியிருக்கின்றனர், மதத்தூண்கள்.

இவைகளை, அப்படியே நம்பும் காலமா, இது?-அதனால்தான், கேள்விகள் பிறக்கின்றன! அதைக் கண்டு கிலேசம்அடைகின்றனர், மதக்காவலர்கள்!!

வளையல் — ஜகன்னாதர் — விதவையான அவர் மனைவி—என்று, சராசரி சம்பவங்களோடு, இவைகளைவைத்துப் பாருங்கள்! ஒட்டுமா-இயற்கையோடு. பரமஹம்சர் பாதையில் செல்லுகிறேன் என்றால்தான், விடுமா, ஊர்! 'விதவையானவள்' என்று எவ்வளவு வேதனை அம்புகளைத் தாக்கும்!!

ஒவ்வொரு மகாத்மீயமும், கருத்துக்கு ஒவ்வாததாகமட்டுமல்ல-கடைப்பிடித்தால், புராணீகர்களாலேயே, கிண்டல் செய்யப்படும் அளவில் இருக்கின்றன.

அதைச் சொன்னால்தான் ஆத்திரம் வருகிறது, ஆஸ்தீகப் போர்வையில் உலவுபவர்களுக்கு! ஏடா! மூடா!!—என்று, பாய்கின்றனர், நம்மீது. அவர்கள், கிடக்கட்டும்-அத்தகைய ஆசாமிகளை நம்பி, 'முதல்தேதி நோக்கி' வாழும் எத்தனை ஜகன்னாதர்கள், இன்னும்பழம்! பால்! சூடம்! தட்சணை! என்று, தூக்கிக்கொண்டு செல்லுகிறார்கள்.

'அவர்கள் சிந்தனை தெளிவடையுமா', என்பதற்காகவே, இதனைச் சுட்டிக் காட்டலானோம்.

★


மதுரை மாவட்ட

# திராவிட முன்னேற்றக் கழக இரண்டாவது மாநாடு

## 1955 ஜனவரி 8, 9 சனி, ஞாயிறு தேதிகளில்

மதுரை ஆரப்பாளையம் ஞானஒளிவுபுரம்
சௌந்தரபாண்டியனார் பந்தலில் நடைபெறும்

சனி 8—1—55
சமூக சீர்திருத்த மாநாடு
தலைவர்
**சத்தியவாணிமுத்து**
திறப்பாளர்
**தில்லை-வில்லாளன்**

ஞாயிறு 9—1—55
அரசியல் மாநாடு
தலைவர்
**மு. கருணாநிதி**
திறப்பாளர்
**எம். பி. சுப்பிரமணியம்**

இரண்டு நாட்களிலும் அண்ணா அவர்களும்
இயக்க முன்னணி வீரர்களனைவரும் கலந்துகொள்வர்

இரு நாட்களிலும் இசை முரசு நாகூர் அனீபா, இசைச் செல்வி பி. எஸ். செல்வா குழுவினர் இசை விருந்து வழங்குவர்.

இரு நாட்களிலும் நடிப்புச் செல்வர் எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினர், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினர் நடிக்கும் புதிய நாடகங்களுண்டு.

மாநாட்டுக் கட்டணம் (இரு நாட்களுக்கும் நாடகங்களுட்பட)
வரவேற்பாளர் ரூ 5, பிரதிநிதி ரூ 2, பார்வையாளர் ரூ 1. பெண்கள் அணா 8.

வ. கு. தலைவர், பொருளாளர்.
எஸ். வி. தொந்தி

தொண்டர்படைத் தலைவர்
எஸ். எஸ். இராசேந்திரன், பி. கே. சேதுராமன், மு. வேலு.

செயலாளர்கள்
எஸ். முத்து, எம். அய்யாசாமி


Edited, Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
95 Tirukkachinambi St, Kancheepuram.